Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY
SELL
INVEST
DIVAGARAN
MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

34ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நிதி: 34 பாலம்: 13 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JULY 01, 2024

மத்திய அரசிற்கான இடைத்தேர்தலில் பழமைவாதக்கட்சி வென்றது!

ரொறொன்ரோ-செயின்ட்.போல் (Toronto-St.Paul's) தொகுதியில் 2024 யூன் 24ஆம் திகதி நடைபெற்ற கனடிய மத்திய அரசிற்கான இடைத்தேர்தலில் பழமைவாதக் கட்சியைச் சேர்ந்த டொன் ஸ்ரூவர்ட் (Don Stewart) வெற்றி பெற்றார்.

இதுவரை காலமும் இத்தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கரோலின் பெனட் (Carolyn Bennett) 2024 ஜனவரி 16ஆம் திகதி பதவி விலகியதைத் தொடர்ந்து இந்த உறுப்பினர் பதவி வெற்றிடமானது. கரோலின் பெனட் அரசியலுக்கு வருவதற்கு முன்னர் 20 வருடங்களுக்கு மேல் குடும்ப மருத்துவராக இருந்தவர். 1995ஆம் ஆண்டில் ஒன்ராறியோ மாகாண அரசியலில் லிபரல் கட்சியின் சார்பில் அரசியலிற்கு வந்த கரோலின் பெனட், 1997ஆம் ஆண்டில் நடைபெற்ற கனடிய மத்திய அரசிற்கான தேர்தலில் போட்டியிட்டு முதன்முறையே லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார். அன்றிலிருந்து அடுத்து வந்த எட்டு நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர் போட்டியிட்டு வென்றார். அவர் 1997ஆம் ஆண்டில் இருந்து 2024ஆம் ஆண்டுவரை தொடர்ந்து ரொறொன்ரோ-செயின்ட்.போல் தொகுதியின் லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்து வந்தார். இவர் தனது நாடாளு மன்ற உறுப்பினராகப் பதவி வகித்த காலத்தில் பொதுச் சுகாதார அமைச்ச ராகவும், சுதேச மற்றும் வட பிராந்தி யத்திற்கான விவகார அமைச்சராகவும், அரசாங்க-பூர்வீகக் குடிகளின் உறவிற் கான அமைச்சராகவும் மற்றும் மனநலம் மற்றும் போதைவஸ்துகளுக்கு அடிமை யாதல் துறை அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். கரோலின் பெனட் தனது பதவி விலகலை அறிவித்த உடனேயே கனயடிப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ அவரை டென்மார்க்கிற்கான கனடாவின் அடுத்த தூதராக (Ambassador of Denmark) அறிவித்தார்.

Don Stewart - Conservative Party

1997ஆம் ஆண்டில் கரோலின் பெனட் ரொறொன்ரோ-செயின்ட்.போல் தொகுதி யின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட முன்னரும் இத்தொகுதியை 1993ஆம் ஆண்டில் இருந்து 1997ஆம் ஆண்டுவரை பிரதிநிதித்துவப்படுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் லிபரல் கட்சியைச் சேர்ந்த சட்டத்தரணியான பரி கம்பெல் (Barry Campbell) ஆவார். கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இத்தொகுதி லிபரல் கட்சியின் கோட்டையாக இருந்து வந்தது.

லிபரல் கட்சி 2011ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைந்து 34 ஆசனங்களை மட்டும் பெற்று நாடாளுமன்றத்தில் 3ஆம் இடத்திற்கு வந்தபோதும்கூட இத்தொகுதி யில் லிபரல் கட்சி வெற்றி பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

2024 யூன் 24இல் ரொறொன்ரோ-செயின்ட்.போல் தொகுதியில் நடைபெற்ற கனடிய மத்திய அரசிற்கான இடைத்தேர்தலில் லிபரல் கட்சியின் சார்பில் லெஸ்லி சேர்ச் (Leslie Church) போட்டியிட்டிருந்தார். இவர் நிதி மற்றும் துணைப்பிரதமர் கிறிஸ்டியா ஃபிரீலண்டின் அலுவலக தலைமை அதிகாரியாக (Chief of Staff) 2021ஆம் ஆண்டில் இருந்து பணியாற்றி வந்தவர். அவர் அதற்கு முன்னர் 2015ஆம் ஆண்டில் இருந்தே ஜஸ்ரின் ரூடோவின் அரசில், மூத்த அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். லெஸ்லி சேர்ச் லிபரல் அரசின் நான்கு அமைச்சர்களுக்கு அலுவலகத் தலைமை அதிகாரியாக இருந்துள்ளார்.

லெஸ்லி சேர்ச் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்ற பின்னர் சட்ட நிறுவனம் ஒன்றில் பணியாற்றியிருந்தார். இவருக்கும் கணவருக்கும் மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

பழமைவாதக் கட்சியின் சார்பில் இந்த இடைத்தேர்தலில் போட்டியிட்டு வென்றவர் டொன் ஸ்ரூவட். இவர் கிங்ஸ்ரனில் உள்ள குயின்ஸ் பல்கலைக்கழகத்தில் பயின்று பொறியியலிலும், வணிகத்திலும் பட்டங்களைப் பெற்றுள்ளார். வணிகத் துறையில் தனது பணியைத் தொடங்கிய டொன் ஸ்ரூவட், தற்போது கனடிய முதலீட்டு ஒழுங்குமுறை அமைப்பில் (Canadian Investment Regulatory Organization) பணியாற்றுகிறார். இந்நிறுவனம் கனடிய மூலதனச் சந்தை களைப் (Capital Markets) பாதுகாப் பாகவும், நியாயமாகவும், திறமையாகவும் வைத்திருப்பதற்கு உதவிபுரியும் நிறுவன மாகும். அத்துடன் டொன் ஸ்ரூவட் ஒன்றாறியோ மாகாணத்தின் பதிவு

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

CANADIAN COLLEGE FOR HIGHER STUDIES
LEARN AI AND CYBER SECURITY FOR FREE IF QUALIFIED
• You could be job ready in 10 months!
• Conditions apply.
Call:
(416) 489-8946
study@thecanadiancollege.ca
705 Progress Ave Unit 108 Toronto

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436

CANADIAN COLLEGE
Canadian Residents!
You may qualify to receive up to $28,000 to enhance your skills!
THIS IS NOT A LOAN.
Take advantage of this opportunity!
study@thecanadiancollege.ca
416-850-1456 +1 437-223-4505

NACPT PHARMA COLLEGE
CANADIAN STUDENT VISA PILOT PROGRAM
Visitor Visa மூலம் வந்துள்ள இலங்கை மாணவர்களுக்கு
DLI Institution
MORE INQUIRY:
647 998 7374
info@nacptpharmacollege.com
www.nacptpharmacollege.com
Campus Locations Toronto: 9 - 5310 Finch Ave East, Toronto, ON M1S 5E8
Brampton: 44 Queen St E, Brampton, ON L6V 1A2

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

REFUGEE ASYLUM SEEKER
சட்டச்சேவை
தமிழில் சட்ட சேவைகள் வழங்கப்படும்.
அழையுங்கள் : வினோத் குமார்
IRB Hearing Paralegal
BA LLB LLM (Osgoode Law School)
647.766.5189

HOMELIFE GTA REALTY AWARDS 2023

in

TORONTO

கனவு உங்களுடையது; பொறுப்பு எங்களுடையது.

HOMELIFE/GTA Realty inc.

Awards 2023

Toronto

A few

Award Winners....

HomeLife/GTA Realty Inc. Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

Tel: 416-321-6969

* Independently owned and operated.

Available Till Midnight
Including Weekends & Holidays
ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT
#1 Mortgage Agent in GTA
#2 in Canada
CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS
PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL
MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS
416 704 1200
anton@myhomemls.ca
MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4
FAX: 1 866 566 3068

பந்தயக் கோட்டை நெருங்கிய ரணில்

– அரவின் –

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான முன் ஆயத்தங்களைத் தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொள்ளத் தொடங்கி இருக்கிறது.

இந்த மாத நடுப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பை வெளியிடுவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்குக் கிடைக்கப்போகிறது.

இந்தத் தேர்தலில் சஜித் பிரேமதாசவும், அனுரகுமார திசநாயக்கவும் போட்டியிடுவது உறுதியாகியிருந்த நிலையில், நானும் களத்தில் இருக்கிறேன் என்பதை வெளிப் படுத்தியிருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க.

அவர் இதனை இன்னமும் பகிரங்கமாக அறிவிக்கவில்லை. அவர் யாருடன் இணைந்து, எவ்வாறு தேர்தலை எதிர்கொள்வது என்று முடிவு செய்யாமல் இருந்தார். அதனால்தான் பதுங்கிப் பதுங்கிக் கொண்டிருக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்க எப்போதுமே எதிரிகளை நெஞ்சுக்கு நேரே எதிர்கொள்பவர் அல்ல. பின்புறமாகத் தாக்குபவர். புறமுதுகில் குத்துபவர்.

ஜனாதிபதித் தேர்தல் விடயத்திலும் அவர் அவ்வாறுதான் நடந்து கொள்வார் என்று தெரிகிறது.

கடந்த 26ஆம் திகதி இரவு நாட்டு மக்களுக்கு விசேட உரை நிகழ்த்தி இருந்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அன்று காலை பாரிசில், கடன் வழங்கிய நாடுகளுடன் 5.8 பில்லியன் டொலர் கடன் மறுசீரமைப்பு உடன்பாட்டில் கையெழுத்திட்டதை, பீஜிங்கில் சீன எக்ஸிம் வங்கியுடன் 4.2 பில்லியன் டொலர் கடன் மறுசீரமைப்பு உடன்பாட்டில் கையெழுத்திட்டதை வெளிப்படுத்தும் நோக்கில் மாத்திரம் நிகழ்த்தப்பட்ட ஒன்றல்ல அவரது உரை.

இலங்கைக்கு 37 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடன்கள் இருக்கின்ற நிலையில், வெறும் 10 பில்லியன் டொலர் இருதரப்புக் கடன்களை மறுசீரமைப்பதற்கு மாத்திரம் இணக்கம் காணப்பட்டுள்ளதை பெரியதொரு வெற்றியாக வெளிப்படுத்தி இருக்கிறார் அவர்.

அவர் இந்த உரையை நிகழ்த்தியபோது கொழும்பில் அவரது ஆதரவாளர்கள் வெடிகொளுத்தியும் பால்சோறு பரிமாறியும் கொண்டாடிக் கொண்டிருந்தனர்.

இந்தக் கடன் மறுசீரமைப்பு உடன்பாட்டின் மூலம், 10 பில்லியன் டொலர் கடன்களை, திருப்பிச் செலுத்துவதிலிருந்து 2027ஆம் ஆண்டுவரை இலங்கை அரசாங்கத்துக்குக் காலஅவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 2028ஆம் ஆண்டு தொடக்கம், 2048ஆம் ஆண்டுவரை, இந்தக் கடன்களைச் திருப்பிச் செலுத்த இணக்கப்பாடு காணப்பட்டிருக்கிறது.

இதனைத்தான் மிகப்பெரிய வெற்றியாக அறிவித்திருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. இந்த உடன்பாட்டின்மூலம், இடைநிறுத்தப்பட்ட திட்டங்களை மீளத் தொடங்கலாம், புதிய கடன்களை வாங்கலாம், கடன் பத்திரங்களை விற்கலாம், என்றும் அவர் பட்டியலிட்டிருக்கிறார்.

அடுத்த கட்டத்துக்கு அவர் நாட்டை எவ்வாறு கொண்டுசெல்லப் போகிறார் என்று தெரியாத நிலையில், நாட்டைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அவர் மறைமுகமாக கேட்டிருக்கிறார்.

புகழ்பெற்ற ஜேர்மன் நாடக ஆசிரியரின் 'தி கொகேசியன் சோக் சேர்க்கிள்' என்ற நாடகத்தை உதாரணம் காட்டி, மக்களிடம் ஆணை கேட்டிருக்கிறார்.

அந்த நாடகத்தில், நாட்டின் ராணி, தன் குழந்தையைக் கைவிட்டு செல்வத்தைத் தேடி ஓடுகிறார். குழந்தையைப் பணிப்பெண் பாசமாக வளர்க்கிறார். பின்னர் இருவருக்கும் இடையில் உரிமைப் பிரச்சினை வருகிறது. விவகாரம் நீதிபதியிடம் செல்கிறது. அவர் வட்டம் ஒன்றை வரைந்து அதன் நடுவே வைத்து குழந்தையை இருவரையும் இழுக்கச் சொல்கிறார். பெற்ற தாயான அரசி அதற்கும் தயாராகிறார். வளர்ப்புத் தாயான பணிப்பெண் விட்டுக் கொடுக்கிறார். அவரது பாசத்தை மதித்து நீதிபதி குழந்தையைப் பணிப்பெண்ணுக்குச் சொந்தமாக்குகிறார். இதுதான் கதை.

இந்தக் கதையைக் கூறி, தற்போது குழந்தைக்காகப் பலபேர் பல பக்கம் இழுக்கின்றனர் என்றும், ஆனால் குழந்தை அந்த நாடகத்தில் பாசமுள்ள தாய்க்குக் கிடைத்ததுபோல, சரியானவரிடம் நாடு கையளிக்கப்பட வேண்டும் என்றும் கேட்கிறார். குதிரையைச் சரியான ஓட்டுநரிடம் கொடுக்க வேண்டும் என்கிறார்.

ஆக, ரணில் விக்கிரமசிங்க இந்த உரையின்மூலம், பொருளாதாரப் போரை வென்று சாதனை படைத்துவிட்டவராகப் பிரகடனம் செய்திருக்கிறார்.

மற்றொரு பக்கம், தன்னிடம் நாட்டின் அதிகாரத்தைத் கொடுக்க வேண்டும் என்றும் மறைமுகமாகக் கூறியிருக்கிறார்.

இதன்மூலம் அவர் நானும் போட்டியில் இருக்கிறேன் என ஏனைய வேட்பாளர்களுக்குச் சமிக்ஞை அனுப்பியிருக்கிறார்.

அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதெனத் தீர்மானித்துள்ள அதேவேளை, எந்த அணியில் களமிறங்குவது என்று தீர்மானித்து விட்டார் என்றும் செய்திகள் கூறுகின்றன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு 3 வாய்ப்புகள் உள்ளன.

ஒன்று, அவரது ஐதேகவில் போட்டியிடுவது. அது சாத்தியமற்றது. பலவீனப்பட்டுள்ள அந்தக் கட்சியின் சார்பில் போட்டியிட முடியாது. போட்டியிட்டால் தோல்வி நிச்சயம்.

இரண்டு, அவர் பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் போட்டியிடுவது. பொதுஜன பெரமுனவின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்து விட்டாலும், அதற்கு ஒரு தனியான வாக்கு வங்கி இருப்பதை மறுக்க முடியாது. அதனால் ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் மும்முனைப் போட்டியில் வெற்றிக்காகக் கடுமையாக முயற்சிக்கலாம் என்ற தெரிவு இருக்கிறது.

ஆனால் ராஜபக்சவினரைப் பொறுத்தவரையில், ரணிலை வேட்பாளராக நிறுத்துவதில் அவர்களுக்குப் பிரச்சினை இல்லை. அவர்களின் ஒரே பிரச்சினை ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் என்பதுதான். ஆனால் ரணில் அதற்குத் தயாராக இல்லை.

மூன்றாவது தெரிவு, ரணில் விக்ரமசிங்க சொந்தக் கட்சியிலும் போட்டியிடமாட்டார், இன்னொரு கட்சியிலும் போட்டியிட மாட்டார். தனியாக சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடுவார் என்பது.

இப்படிப் போட்டியிடுவதற்கு அவருக்குப் பலம் உள்ளதா என்பது முக்கியமான கேள்வி. இந்த இடத்தில்தான் அவர் தனது அரசியல் குணவியல்பை வெளிப்படுத்துகிறார்.

அவர் தனது நண்பர்கள், எதிரிகள் என்று வேறுபாடு இல்லாமல், எல்லோரையும் தன்னை நோக்கி இழுக்கத் தொடங்கி இருக்கிறார்.

பொதுஜன பெரமுனவில் குறிப்பிட்டளவானோர் அவருக்கு ஆதரவளிக்கத் தயாராக இருக்கின்றனர். அதுபோல ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்தும் ஆட்களை இழுக்கிறார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களையும் தன்பக்கம் கொண்டு வருகிறார்.

இப்படிப் பல்வேறு கட்சிகளையும் அவற்றின் வாக்கு வங்கிகளையும் உடைத்து, பிரித்து தனது பலத்தை நிரூபிக்க அவர் எத்தனிக்கிறார்.

இதுதான் அவரது தீர்க்கமான முடிவாக இருக்கும் என்று பரவலாக நம்பப்படுகிறது. இது சரியாக அமைந்தால் அவர் சுயேட்சை வேட்பாளராக பொதுச் சின்னம் ஒன்றில்தான் போட்டியிடுவார்.

அவருக்கு பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த அமைச்சர்களாக இருக்கின்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற பலர் ஆதரவளிப்பர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த மைத்திரி, விஜயதாச தரப்பைத் தவிர, மற்றவர்கள் ஆதரவு வழங்குவர். ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கியும் அப்படியே அவருக்குக் கிடைக்கும்.

ரணில் விக்கிரமசிங்க இன்னமும் தனது உறுதியான முடிவை பகிரங்கப்படுத்தவில்லை. ஆனால் வரும் நாட்களில் அவர் அதனைச் செய்யக்கூடும்.

ஏனென்றால் இன்னும் இரண்டு வாரங்களில், ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்புக்கான கடிவாளம் தேர்தல்கள் ஆணைக் குழுவின் கையில் கிடைத்து விடும். அதற்குப் பின்னர், ரணில் விக்கிரமசிங்க தனது முடிவை வெளிப்படுத்துவதற்குக் காலத்தை இழுத்தடிக்க முடியாது.

ஒருவருடன் பேசும் போது நீங்கள் என்ன அர்த்தத்தில் பேசுகிறீர்கள் என்பதை விட, நீங்கள் கூறுவதை அவர் என்ன அர்த்தத்தில் புரிந்து கொள்கிறார் என்பதை கவனித்து பேசுங்கள்...

விளம்பரம்
VLAMBARAM
34ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

மத்திய.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்யப்பட்ட உரிமம் உள்ள பொறியியலாளர் (P.Eng.) ஆவார். இவர் கனடிய ஆயுதப்படை உறுப்பினராக பகுதிநேரமாகப் பணியாற்றியும் வருகிறார். 2016ஆம் ஆண்டில் இருந்து இரண்டு மகள்களுடன் இவர் இத்தொகுதியில் வாழ்ந்து வருகிறார்.

Carolyn Bennett - Canada's Ambassador to Denmark

டொன் ஸ்ருவட் தனது தேர்தல் பிரச்சாரத்தில் ஜஸ்ரின் ரூடோவின், இஸ்ரேலிய அரசிற்கான ஆதரவு திருப்தி கரமாக இல்லை என விமர்சித்து வந்தார். அத்துடன் லிபரல் அரசின் ஆட்சிக் காலத்தில் வாகனத் திருட்டுகள் அதிகரித் துள்ளதாகவும், குற்றங்களைத் தடுப்பதற் கான முயற்சிகளை மத்திய அரசு எடுக்கவில்லை எனவும் விமர்சித்து வந்தார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் இந்த இடைத்தேர்தலில் அம்ரித் பர்ஹார் (Amrit Parhar) வேட்பாளராகப் போட்டியிட்டார். இவர் ரொறொன்ரோ நகர முதல்வர் ஒலிவியா சோ (Olivia Chow)ஆல் நிறுவப்பட்ட தலைவர்களுக் கான மாற்றம் நிறுவனத்தின் (Institute for Change Leaders) இயக்குநராகப் பணியாற்றுகின்றார்.

பசுமைக்கட்சி, மக்கள் கட்சி, மார்க்சிஸ் லெனினிஸ்ட் கட்சி, காண்டாமிருகம் கட்சி, மரிஜுவானா கட்சி, மையவாதிக் கட்சி மற்றும் ஒன்றுடனும் சேராத கட்சி எனப் பல கட்சிகள் இந்த இடைத்தேர்தலில் தமது வேட்பாளர்களை நியமித்திருந்தன. இவர்களைவிட 74பேர் சுயேச்சை வேட்பாளர்களாகத் தம்மை பதிவு செய்திருந்தனர்.

மொத்தமாக இந்த இடைத்தேர்தலில் 84 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். கனடா வில் தற்போது நடைமுறையில் உள்ள ஒருவருக்கு ஒரு வாக்கு எனவும் அதில் கூடிய வாக்குகளைப் பெற்றவர் வென்ற தாக அறிவிக்கும் 'First-Past-ThePost' வாக்களிப்பு முறையை எதிர்க்கும் 'நீண்ட வாக்குப்பதிவுக் குழுவினர்' நடைபெறும் இடைத்தேர்தல்களில் இந்த வாக்களிப்பு முறையை எதிர்ப்பதற்காக பல வேட்பாளர்களை சுயேட்சையாகப் பதிவு செய்து போட்டியிடுவர்.

இத்தேர்தலிலும் இந்த FPTP வாக்களிப்பு முறையை எதிர்த்து 60இற்கும் மேற்பட்ட சுயேச்சை வேட்பாளர்கள் பதிவு செய்திருந்தனர். இவர்கள் தேர்தலில் பிரச்சாரங்கள் செய்வது இல்லை. அத்துடன் இவர்கள் இத்தொகுதியில் வாழ்பவராகவும் இருக்கத் தேவையில்லை. "எங்களது தற்போதைய வாக்களிப்பு முறை நகைச்சுவையானது (Joke). அது முற்றிலும் தவறான முடிவைத் தருகிறது. இதை நாம் முன்னிலைப்படுத்தி மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்" என நீண்ட வாக்குப்பதிவுக் குழுவின் தொண்டரும் இத்தொகுதியின் சுயேட்சை வேட்பாளர்களில் ஒருவருமான கிளென் மக்டானால்ட் (Glen MacDonald) ஊடகங்களுக்குத் தெரிவித்தார். இவ்வாறு

Leslie Church - Liberal Party

FPTP வாக்களிப்பு முறையை எதிர்க்கும் 'நீண்ட வாக்குப்பதிவுக் குழு' கடந்த இரண்டு இடைத்தேர்தலிலும் அதிக சுயேட்சை வேட்பாளர்களைப் போட்டியிட வைத்தது. 2022ஆம் ஆண்டில் Mississauga-Lakeshore தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் 40 வேட்பாளர்களும், 2023ஆம் ஆண்டில் Winnipeg தெற்கு மத்திய தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் 48 வேட்பாளர்களும் போட்டியிட்டனர்.

இம்முறை ரொறொன்ரோ-செயின்ட்.போல் இடைத்தேர்தலில் 84 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதுவே கனடாவில் இதுவரை ஒரு தொகுதியில் போட்டியிட்ட அதிகூடிய வேட்பாளர்களாகும். நீண்ட வாக்குப்பதிவுக் குழுவில் ஒருவரும் இந்த மூன்று இடைத்தேர்தலிலும் சுயேட்சையாக போட்டியிட்டவருமான ஜுலி செயின்ட். அமண்ட (Julie St.Amand) ஊடகங்களுக் குத் தெரிவிக்கையில், "அதிக எண்ணிக் கையிலான வேட்பாளர்கள், தேர்தல் சீர்திருத்த விவாதத்தில் மக்களின் கவனத்தை ஈர்க்க உதவும் என தான் நம்புவதாகவும், அதிகமான மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும், இவ்விடயத்தைப் பற்றிப் பேசுவதன் மூலமும் தேர்தல் சீர்திருத்த விவாதம் காட்டுத்தீபோல் பரவும் என நாங்கள் நம்புகிறோம்" என்றார்.

கனடாவின் தேர்தல் திணைக்களம் அதிக அளவு பெயர்களை வாக்குச்சீட்டில் இடம்பெறவைப்பதற்காக தனக்குள்ள அதிகாரத்தைப் பாவித்து தேர்தல் சட்டத்தில் பல தற்காலிக மாற்றங்களைச் செய்தது.

வாக்குச்சீட்டில் பாரம்பரியமாக ஒரு பத்தியில் இருக்கும் வேட்பாளர்களின் பெயர்களை இந்த இடைத்தேர்தலுக்குரிய வாக்குச்சீட்டில் இரண்டு பத்திகளில் பட்டியலிட்டது. அத்துடன் வாக்குச் சீட்டில் பாரம்பரியமாக பெயரின் வலது புறத்தில் மட்டும் இருக்கும் வாக்காளர் புள்ளியிடும் வட்டங்கள் இம்முறை வலது மற்றும் இடதுபுற ஓரங்களில் வழங்கப்பட்டிருந்தன. இந்த இடைத்தேர்தலுக்குரிய வாக்குச்சீட்டு 30செ.மீ. அகலமும் 90செ.மீ. நீளமும் உடையதாகக் காணப்பட்டது.



ரொறொன்ரோ நகர்புறத்திற்கு (Downtown) வடக்கு மற்றும் வடமேற்குப் பகுதியில் உள்ள இந்த ரொறொன்ரோ-செயின்ட்.போல் தொகுதி ரொறொன்ரோ மத்திய நகர்ப்பகுதி (Midtown) என அழைக்கப்படும். இது ரொறொன்ரோவில் செல்வந்தர்கள் வசிக்கும் Forest Hillஇன் பெரும்பகுதியை உள்ளடக்கியது. இத் தொகுதியில் வாழ்பவர்களில் 40%இற்கு மேற்பட்டோர் கிறிஸ்தவர்களாகவும் 15%இற்கு மேற்பட்டோர் யூதர்களாகவும் இருக்கின்றனர். இந்துக்களும், இஸ்லாமி யர்களும் தனித்தனியே 3%இற்கு சற்று அதிகமாக வாழ்கின்றனர். இத்தொகுதி மக்களின் சராசரி வருமானம் $90 ஆயிரம் ஆகும்.

30 வருடங்களுக்கு மேலாக லிபரல் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி வந்த இந்தத் தொகுதியின் இடைத்தேர்தல் பெரும்பான்மையான ஊடகங்களாலும் அரசியல் விமர்சகர்களாலும் ஜஸ்ரின் ரூடோ மீதான நம்பிக்கை வாக்கெடுப்பாகக் கருதப்பட்டது.

தேர்தல் முடிவின்பின் வாக்குகள் எண்ணிக்கை மாலை 8.30 மணிக்கு ஆரம்பித்தது. லிபரல் கட்சியின் லெஸ்லி சேர்ச் பெரும்பாலான நேரம் முன்னணியில் இருந்தாலும் அவர் மிகக்குறைந்த வாக்குகளால்தான் முன்னணியில் நின்றார். நள்ளிரவின் பின்னர் பழமைவாதக்கட்சியின் டொன் ஸ்ருவட் முன்னணிக்கு வந்தார். இறுதி முடிவுகள் அதிகாலை 4.30 மணி

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

கண்டேன் கனடாவை

ஆனந்தம் விளையாடும் அழகான நாடம்மா
நானந்த நாட்டில் நடமாடும் சடமம்மா..........

கலையொளிர் கானங்கள் காவிய ஓவியம்
விலைமதிப் போங்கிய வித்தக விளையாட்டு
அலையலை யாகவே அயல்நாடு வந்திங்கு
தலைகவிழ் நயகராவைத் தரிசித்து மகிழுமே!
காற்றினில் கனிவான கானங்கள் கேட்குது

கனடாவில் நாம்வந்து கனகாலம் ஆயிற்று
இனமானம் இம்மியும் இல்லாமல் போயிற்று
தனலாபம் கருதியே தன்மானம் தளருது
மனமாரப் பெற்றோரை மதிக்காது விடுகுதே!

நானென்ன நானம்மா நாமென்று கூறம்மா
தானென்ற மமதையைத் தள்ளிநீ வையம்மா
ஞானம்கொள் கல்வியை நம்பிநீ வாழம்மா
வானமே பொய்யா வளமிகு நாடம்மா!

நாடென்ன நாடம்மா நலம்பேணும் நாடம்மா
காடென்ன மலையென்ன கனிமங்கள் கடலென்ன
மாடங்கள் கூடங்கள் மஞ்சினைத் தொடுதம்மா
ஓடங்கள் ஓடிடும் ஒல்லாச நதியம்மா!

கூனர்க்கும் குருடருக்கும் குறைவிலா நிறைவுண்டு
தேனுக்கும் பாலுக்கும் தெவிட்டாத் திருநாடு
வானுக்கு மழையுண்டு வறியோற்குத் துணையுண்டு
கோனுக்குக் குணமுண்டு குபேர புரியம்மா

மானென்ன மரையென்ன மண்ணின் மகிழ்வென்ன
ஞானங்கொள் பல்லின யௌவன உறவென்ன

நூற்றி ஐம்பத்தேழாம் வயதினை
போற்றி மகிழ்ந்திடப் பொங்குது வாணங்கள்
வாழ்த்தி வணங்குவோம் வாருங்கள் வாருங்களே!

உலகிற்கு ஒரு செய்தி! உண்மையிது! பொய்யல்ல!
கலகங்கள் இல்லாத கனமத கலாச்சாரம்
பலஇனப் பண்பாடு படர்கின்ற திருநாடு
உலவிடும் அயலவற் குதவிடும் பெருநாடே!

இந்த நிலைக்கு யார் காரணம்?

– முகிலன் –

கொழும்பு அரசியல் களத்தை மையப் படுத்திய இரண்டு பேர், வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெளியிட்டுள்ள கருத்துக்கள் கவனத்தை ஈர்ப்பதாக இருந்தன.

அவர்களில் முதலாமவர், முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா.

இரண்டாமவர், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் தவிசாளருமான வஜிர அபேவர்த்தன.

இந்த இரண்டு பேரும் கூறியிருக்கின்ற விடயங்கள் இரண்டுக்கும், எந்த நேரடித் தொடர்பும் கிடையாது. வேறு வேறு சந்தர்ப்பங்களில், வேறு வேறு கோணங்களில் வெளியிடப்பட்டிருக்கின்ற கருத்துக்கள் இவை.

ஆனால் தமிழரைப் பொறுத்தவரையில் இந்தக் கருத்துக்கள் முக்கியமானவை. ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டியவை. போகிற போக்கில் படித்துவிட்டு தூக்கி எறிந்துவிட்டுப் போய்விடக்கூடியவை அல்ல. தமிழரின் அரசியலில் உள்ள தீர்க்கமான குறைபாடுகளை, வெளிப்படுத்துகின்ற கருத்துக்கள் அவை. முதலில் இவர்கள் என்ன கூறியிருக்கின்றனர் என்று பார்க்கலாம்.

அண்மையில் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடவுள்ளவருமான சஜித் பிரேமதாச வடக்கிற்கு பயணம் மேற்கொண்டு இருந்தார்.

அந்தப் பயணத்தின்போது அவர், 13வது திருத்தச் சட்டத்தை அரசியலமைப்பில் உள்ளபடி நிறைவேற்றுவதற்கு, தான் தயாராக இருப்பதாக பகிரங்கமாகக் கூட்டங்களில் தெரிவித்திருந்தார். அத்துடன் யாழ்ப்பாணத்தில் தமிழ் கட்சி களின் பிரதிநிதிகளைச் சந்தித்தபோதும் அவர் இந்த வாக்குறுதியை வழங்கியிருக்கிறார்.

சஜித் பிரேமதாச 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்குத் தயார் என்று அறிவித்ததும் கொழும்பு அரசியலில் ஒருவித பரபரப்பு, பதற்றம் ஏற்பட்டது.

அவருக்கு எதிராக சிங்கள தேசியவாத சக்திகள் பிரசாரங்களை முன்னெடுக்கத் தொடங்கின.

அதேவேளை, புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரும் வரை, தாங்களும் 13வது திருத்தச் சட்டத்தை ஒரு இடைக்கால ஏற்பாடாக, ஏற்றுக்கொள்ளத் தயார் என யாழ்ப்பாணம் சென்றிருந்த ஜேவிபியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசநாயக்கவும் அறிவித்திருந்தார்.

இதற்குப் பின்னர், ரணில் விக்கிரமசிங்க வும்கூட, அதற்கு இணங்குவதாக நாடாளு மன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியிருக்கிறார்.

இவ்வாறான பின்னணியில், நாடாளு மன்றத்தில் அண்மையில் உரையாற்றிய சரத் பொன்சேகா, 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன் என்று கூறும் வேட்பாளருக்கு வடக்கு மற்றும் தெற்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது என்று தெரிவித்திருக்கிறார்.

தெற்கில் யார் எதிர்த்தாலும் 13 வழங்கப்படுமாம்., அப்படி வழங்குவதற்கு 13ஆவது திருத்தம் என்ன அவரது அப்பன் வீட்டுச் சொத்தா? என்று கேள்வி எழுப்பி இருக்கிறார். அவர் சஜித் பிரேமதாசவைப் பார்த்துத்தான் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அது அவரது உட்கட்சி விவகாரம்.

படையினர் நாட்டை ஒன்றுபடுத்துவதற் காகத்தான் உயிர்களைத் தியாகம் செய்தனர் என்றும், 13வது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும், தமிழ் மக்களை நோக்கி அவர் ஏன் கேட்க வேண்டும்?

தமிழ் மக்கள் 13வது திருத்தச் சட்டத்தை ஒரு தீர்வாக ஏற்றுக்கொள்ளவும் இல்லை. அது தமது பிரச்சினையைத் தீர்க்கும் என்று கருதவும் இல்லை.

அதேவேளை, தமிழ் மக்களுக்கான தீர்வு ஒன்று எட்டப்படும்வரை 13ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரங்களை யாவது நடைமுறைப்படுத்த வேண்டும் என தமிழ்த் தலைவர்கள் கூறியது உண்மை.

அப்படி இருக்க, சரத் பொன்சேகா, 13வது திருத்தச் சட்டத்தைத் தருவதாக வாக்குறுதி அளிக்கும் வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் கூறுவது நகைப்புக்கிடமான ஒன்று.

தமிழ் மக்கள் போரை நடத்தி நாட்டை ஐக்கியப்படுத்தும்படி, சரத் பொன்சேகா விடம் கேட்கவில்லை. இந்த அடிப் படைப் புரிதல்கூட சரத் பொன்சேகாவிடம் இல்லை. அவர், 13ஐத் தருவதாகக் கூறுபவருக்கு வாக்களியாதீர்கள் என்று கூறுகிறார்.

இப்படிப்பட்ட ஒருவரை, 2010ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன், பொது வேட்பாளராக அறிவித்தது? அவருக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களிடம் ஏன் கேட்டுக் கொண்டது?

அப்போது அவர்கள் செய்த தவறுதான், இந்த நிலைக்குக் காரணம்.

ஏற்றி விட்ட ஏணியையே எட்டி உதைத்துவிட்டுப் போகிறவர் சரத் பொன்சேகா. அவரால் அப்படி உதை வாங்கியோர் ஏராளம். மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, இப்போது சஜித் பிரேமதாச என இந்தப் பட்டியல் நீளமானது. இரா.சம்பந்தனையும்கூட அவர் எட்டி உதைத்தவர்தான்.

அண்மையில் அவர் ஒரு செவ்வியில், 2010 ஜனாதிபதித் தேர்தலில் வடக்கில் தனக்குக் கிடைத்தளவு வாக்குகள்கூட, அதனையடுத்து நடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைக்கவில்லை என்று கூறியிருந்தார்.

2010இல் சரத் பொன்சேகாவைப் பொது வேட்பாளராக இரா.சம்பந்தனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏற்றுக் கொண்ட தவறு, இன்று 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக வாக் குறுதி அளிப்பவருக்கு வாக்களியாதீர்கள் என்று தமிழ் மக்களிடம் அவர் கோரு கின்ற நிலையை உருவாகியிருக்கிறது.

இதற்கு தமிழ் அரசியல் தலைமைகளின் பிற்போக்குத்தனமான, தூரநோக்கற்ற முடிவுகள்தான் காரணம்.

சரி, 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது, நாட்டின் ஐக்கியத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறுகின்ற சரத் பொன்சேகா, 2010ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு என்ன தீர்வை வழங்குவதாக இரா. சம்பந்தனுக்கு இரகசிய வாக்குறுதி கொடுத்தார்?

13ஆவது திருத்தத்தைவிட குறைந்த தீர்வுக்கா கூட்டமைப்பு அப்போது இணங்கியது?

அடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எடுப்பார் என்று நம்புவதாக கூறியிருக்கிறார்.

“தமிழ்ப் பொது வேட்பாளர் பயனற்ற விடயம். அதைப் பற்றிப் பேசி நாம் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை. தேவையில்லாத விடயத்தைப் பேசி காலத்தை வீணடிக்கக்கூடாது. தமிழ்த் தலைவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுப்பார்கள்” என்றும் அவர் உறுதியான நம்பிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

அவருக்கு இந்த நம்பிக்கை எப்படி வந்தது, எங்கிருந்து வந்தது, அது யாரால் வந்தது? என்று பார்க்க வேண்டும்.

2010, 2015, 2019 என விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான மூன்று ஜனாதி பதித் தேர்தல்களிலும், ரணில் விக்கிரமசிங் கவுடன் இணைந்தே இரா.சம்பந்தன் தீர்மானங்களை எடுத்திருந்தார். அந்த நம்பிக்கைதான், வஜிர அபேவர்த்தனவுக்கு இப்படியான கருத்தை வெளியிடும் துணிச்சலைக் கொடுத்திருக்கிறது.

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சிகளில் தமிழ்க்கட்சிகளும் சிவில் அமைப்புகளும் ஈடுபட்டிருக்கும் நிலையில், அதனை இரா.சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் மட்டும், கீழறுக்கும் வேலையை முன்னெடுக்கின்றனர்.

அவர்கள் வெளிப்படுத்தி வருகின்ற கருத்துக்கள்தான், இரா. சம்பந்தன் மட்டுமல்ல, தமிழ்க் கட்சிகளும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவுக்கு வரும் என்று வஜிர அபேவர்த்தன, கூறுகின்ற நிலைக்குக் காரணம்.

தமிழ்க் கட்சிகள் வேறு வழியின்றி ரணில் விக்கிரமசிங்கவை அல்லது, அவர் நிறுத் துகின்ற வேட்பாளரைத்தான் ஆதரிக்கும் என்ற நம்பிக்கை சிங்கள அரசியல்வாதி களிடம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு என்ன தீர்வு, அதற்கான வாக்குறுதி என்ன என்பது பற்றியெல்லாம் சிந்திக்காமல், கடந்த காலங்களில் கண்மூடித்தனமாக ஆதரவு வெளியிடப்பட்டதன் விளைவுதான் இது.

இந்த நிலைக்கு முடிவு கட்டப்பட வேண்டும். தமிழரைப் பேய்க்காட்டலாம் என்ற, சிங்களத் தலைவர்களிடம் உள்ள, நம்பிக்கை உடைக்கப்படவேண்டும். அதனைச் செய்தால்தான், அவர்கள் அடுத்த முறையாவது தீர்க்கமான உறுதிமொழியுடன், தீர்வு ஒன்றுடன் தமிழ் மக்களை நோக்கி வருவார்கள்.

இலங்கைத் தமிழரின் சர்வதேச புலம்பெயர்தலும், கல்வியும்

கடந்த இதழ் தொடர்ச்சி...

அவுஸ்திரேலியா

உலகில் ஆறாவது பெரிய நாடு இது. குடியேறிகளால் உருவாகி, வளர்ச்சி பெற்ற நாடு இது. ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்கு முன்புதான் ஐரோப்பியர் இங்கு குடியேறினர். ஆசிய நாட்டவர் வெறுமனே 5 சதவீதத்தினர்தான். 1901இல்தான் இது உருவானது.

இதன் குடித்தொகை ஏறக்குறைய இலங்கையின் குடித்தொகைக்கு சமனானது. இது 20.2 மில்லியன் மாத்திரமே. இங்கு சதுர மைலுக்கு உரிய குடிமக்கள் ஏழு (7) பேர்தான். இலங்கையில் இது 828பேர். துணிந்து புலம்பெயர்ந்து வாழக் கூடிய நாடுதான் அவுஸ்திரேலியா.

அவுஸ்திரேலியா இலங்கையிலிருந்து பத்து மணித்தியாலத்தில் பயணிக்கக் கூடியது. பன்மைக் கலாசாரம் சிறப்பாக விளங்குகின்ற நாடு இது. இங்கு 270 கலாசார பின்னனி கொண்ட மக்கள் இசைந்து வாழ்கின்றனர். தமிழரும் ஒரு பண்பாட்டுப் பிரிவினர். இங்கு 233 மொழிகளை மக்கள் பேசுகின்றனர். இரண்டு தேசிய மொழிகள் நிலவுகின்ற இலங்கையில் காண முடியாத மொழி வழிப் பண்பாட்டை இலங்கைத் தமிழர் இங்கே காண்கின்றனர்.

1983இற்கு முன் தரமான பல்கலைக்கழகப் பட்டம், தரமான ஆங்கில மொழி, தொழில் நுட்ப தகைமை போன்றவற்றைப் பெறுவதற்காக தமிழரும் அதிகம் அவுஸ்திரேலியாவுக்கு தனித்தனியாகச் சென்றனர்.

நாட்டின் அமைதியின்மை, யுத்தம் என்பவற்றுக்குப் பயந்து கூட்டம் கூட்டமாக இலங்கைத் தமிழர் சட்டபூர்வமற்ற முறையில் நுழைகின்றனர். போராளிகள் குடும்பங்களும், தமது சொந்தக் கிராமங்களில் வாழ்வதற்குப் பயந்து வெளியேறிய குடும்பங்களும் இங்கு சட்டபூர்வமற்ற வகையில் நுழைகின்றனர். இவர்களைக் 'கப்பல்காரர்கள்' என்று குறியீடு வைத்து அழைக்கின்றனர். இலங்கைக்குள் சட்டபூர்வமற்ற வகையில் இந்தியாவிலிருந்து குடியேறியோரை 'கள்ளத்தோணிகள்' என்று மரியாதைக் குறைவாக அழைக்கும் பண்பாட்டை இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

இங்கு ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர் வாழ்கின்றனர். தமிழரின் முதன்மையான வாழிடமையமாகி சிட்னி நகரம் உள்ளது. உலகில் மிகப் பெரிய நகரமும், நகரப் பின்னிலமும் சிட்னிக்கு உள்ளது. பீஜிங்கைவிட இரண்டு மடங்கு இது பெரியது. ரோம நகரைவிட ஆறுமடங்கு பெரியது சிட்னி.

புலம்பெயர்ந்து இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பிஜி, நியூசிலாந்து போன்ற பல நாடுகளிலிருந்து குடியேறியவர்களுடன் இலங்கைத் தமிழர் முரண்பாடின்றி நட்புறவுடன் தமது கல்வி, பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியையும், திரட்சியையும் கவனமாகப் பேணி வருகின்றமை பெருமைப்படத்தக்கது.

இலங்கைத் தமிழரில் பொறியியல் பட்டதாரிகளும், தமிழர் பிரதேச பல்கலைக் கழகங்களிலிருந்து முனைவர் பட்டப் படிப்புக்கு சென்று அங்கேயே தங்கிவிட்ட கல்விமான்களும் சிட்னியில் அதிகம்.

தமிழ்ப்பள்ளிக் கூடங்கள் பல தமிழரால் ஸ்தாபிக்கப்பட்டு ஏராளமான எம் குழந்தைகள் தமிழ்மொழியைக் கற்கின்றனர். பண்பாட்டு உணர்வுடன் ஒன்று கூடுகின்றனர். ஆளும் இனமாக உள்ள சிங்கள இன மக்களும் அவுஸ்திரேலியாவுக்குப் பொருளாதார செழிப்பு இலக்குடன் குடிபெயர்ந்து வாழ்கின்றனர். விக்ரோறியா மாநிலத்தில் பயன்படும் பிரதான மொழிகளில் சிங்கள மொழியும் ஒன்றாகும். 2006இல் 70,908 இலங்கையர் வாழ்ந்தனர். இந்தியாவைப் போலவே அண்டை நாடாகவும் இது உள்ளது. 1960வரை வெள்ளையரை மட்டுமே (White only immigration) குடியேற அனுமதிக்கும் கொள்கையே அங்கு பின்பற்றப்பட்டது.

இதன் பின்புதான் பல்வேறு கலாசாரப் பின்னணிகளுடன் ஆசிய மக்கள் குடியேறினர். பல ஆசிய வளர்முக நாடுகளுக்கு அண்மையில் இருப்பதால் சட்டபூர்வமற்ற குடியேறிகள் பிரச்சினை முதன்மையானது. இதனால் இலங்கை அகதிகள் குடியேற்றமும் மென்மையான அணுகுமுறையுடன் அணுகப்படுவதில்லை.

ஐக்கிய இராச்சியம் (UK)

இலங்கையை 1796-1948வரை ஆட்சி செய்தோர் பிரித்தானியர். பிரித்து ஆளும் உபாயத்தினால் அரசியல் மேலாதிக்கம் செலுத்திய நாடு. 1707இல் உருவாகிய பழைய காலப் பேரரசு இது.

பெரிய பிரித்தானியா மற்றும் அயர்லாந்தை உள்ளடக்கிய ஐக்கிய இராச்சியம் இது. 60 மில்லியன் குடித்தொகை கொண்டது. 94,525 சதுர மைல் பரப்பளவு கொண்டது. இங்கு ஆசிய நாட்டு மக்கள் நான்கு சதவீதத்தில் உள்ளனர். திருமணத்துக்குப் புறம்பான 40%மான பிறப்புக்கள் நிகழ்கின்றன. திருமணத்துக்கான தேவை பெரிதும் வீழ்ச்சியடைந்தே செல்கிறது.

1980களில் முதன்முதலில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு இலங்கையிலிருந்து வெளியேறிய தமிழருக்கு உள்ளே நுழைய அனுமதி வழங்கியது ஐக்கிய இராச்சியமே.

இலங்கையிலிருந்து பிரித்தானியா சென்ற இலங்கையர் மூன்று வகைப்பட்டவராய் இருந்தனர் என்கிறார் விக்ரர் ராஜலிங்கம் (2016).

- 1950-1980வரை குடியேறியோர் மேட்டுக் குடியைச் சேர்ந்த நன்கு கல்வி கற்றவர்களது குடியேற்றம் இதுவாகும். அதிகமானோர் மருத்துவத்துறை சார்ந்தவர்களாக இருந்தனர். இலங்கைத் தமிழர் மருத்துவர்களாகவும், உயர் பதவி வகிப்பவர்களாகவும் உயர்ந்த நிலைமைகளை எட்டிப் பிடித்தனர்.

- யுத்த சூழ்நிலைகளில் குறைவான படிப்பறிவு கொண்ட இளம் வயதினராயும், மனோநிலை பாதிக்கப்பட்டவர்களாயும் காணப்பட்டனர். 1980களிலும், 1990களிலும் மன அழுத்தங்களுடன் குடியேறிய தமிழர் இவர்களாவர்.

- எண்ணிக்கையில் குறைவானோர் இவர்கள். இரண்டாம், மூன்றாம் தலைமுறையினரான இலங்கைத் தமிழர் என்று இவர்களைக் குறிப்பிடலாம். பிரித்தானிய மத்தியதர வர்க்கத்தினரிடமிருந்து சனநாயக பன்மைத்துவம் பற்றிய புரிதல் அதிகம் கொண்டோர் இவர்களாவர். சிறப்பான உயர்கல்வியைப் பெற்றோராகவும் இவர்கள் இனங்காணப்படுகின்றனர்.

2016இல் இங்கு இலங்கைத்தமிழர் இரண்டு இலட்சம் பேர் இருந்திருக்க வாய்ப்புண்டு.

உலகில் 1950, 1960களில் தரமான உயர் கல்விக்குரிய நாடாக பிரித்தானியா உயர் அங்கீகாரம் பெற்றிருந்தது. ஒக்ஸ்ஃபிரிட்ஜ் மாதிரி (Oxbridge Model) என்று சிறப்பித்துப் பேசப்பட்ட ஒக்ஸ்ஃபோட், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் படிப்பதற்குச் சென்ற இலங்கைத் தமிழர் பின்பு பல்கலைக்கழகங்களிலும், அரசியலிலும் உயர்மதிப்புடன் விளங்கியிருந்தனர். இதேபோல் மேட்டுக்குடிச் சிங்களவர்களும் அங்கு படித்து அரசியலில் உயர்ந்தனர்.

உலக தரத்திலான பல்கலைக்கழகங்கள் அமெரிக்காவிலும் பிரான்சிலும், ஜப்பானிலும் வளர்ந்ததெல்லாம் புத்தாயிரம் ஆண்டுக்குரிய பிற்கால வளர்ச்சிகள்தான். பிரித்தானியா ஒன்றரை நூற்றாண்டுகள் இலங்கையில் ஆட்சிபுரிந்த காலத்தில் இலங்கையின் நாடாளுமன்ற சனநாயக முறை, கல்வி நிர்வாகம், பல்கலைக்கழக கல்விமுறை என்பவற்றை வளர்ப்பதிலும் அதில் தமது வலுவான செல்வாக்கைச் செலுத்தியிருந்தனர்.

அவர்களது கிறிஸ்தவ மிஷனரியினரது ஆரம்பப் பாடசாலைகளும், உயர்தரப் பாடசாலைகளும் இலங்கைத் தமிழர் கல்வியில் தனிச் சிறப்புகளோடு உயர்ந்து விளங்குவதற்கு அதிகம் துணை செய்துள்ளன.

இலங்கைத் தமிழரது அதியுயர் ஆங்கில மொழிப்புலமையும், தேர்ச்சியும் கொண்டு அதிகளவு அரச பதவிகளைப் பிரித்தானிய அரசாங்கங்களிடம் பெற்றுப் பெருமையடைந்திருந்தனர்.

இலங்கைத் தமிழர் வெளிப்படுத்திய தொழில்சார் உண்மை ஈடுபாடும், தொழில் நேர்மையும், கடின உழைப்பும் ஆங்கிலேயர்களை அதிகம் கவர்ந்தது. இதனால் சிங்கள மக்களைவிட குறைந்த விகிதாசாரத்தில் குடித்தொகையில் இருந்த போதிலும் அரச பதவிகளில் அதிக சதவீதத்தைப் பெற்று உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றனர். இதனைச் சிங்கள மக்கள் நியாயமற்ற தமிழரது தந்திரமாகவே பார்த்தனர். சுதந்திரத்துக்குப் பின் தமிழர் கல்வி, தமிழருக்கான அரச பதவி, ஆங்கில மொழி வழிக்கல்வி போன்றவற்றை அதிகம் ஒடுக்கும் கொள்கை மற்றும் நடைமுறைகளை சிங்கள அரசாங்கங்கள் செய்வதற்கு இந்த உணர்வுகளும் தூண்டுதலாய் அமைந்திருந்தன. ஆங்கிலேய விசுவாசிகளாகவே தமிழரை அவர்கள் நோக்கினர். சுதந்திர இலங்கையின் 75 வருட கால அரசியலின் நோக்கையும், போக்கையும் இந்தத் தளத்திலேயே புரிந்து கொள்ள வேண்டும்.

ஆங்கிலேயர் யுத்த நிலைமையில் அகதிகளாக வெளியேறிய தமிழரை உள்ளே அனுமதிக்க விரும்பியமைக்குப் பின்னால் ஒரு தார்மீக நியாயம் புதைந்து கிடக்கிறது.

1830களுக்கு முன்புவரை தனியரசுகளாக சுதந்திரமாக இயங்கிய தமிழ், சிங்கள அரசுகளை ஒருங்கிணைத்து சுதந்திர இலங்கையாகவே 1948இல் விட்டு விட்டு வெளியேறியோர் பிரித்தானியர்களே. இதன் வழியான பொறுப்பும் பிரித்தானியருக்கு உண்டு. இதனாலோ என்னவோ இலங்கைத் தமிழ் அகதிகளை தமது நாட்டில் வாழ்வதற்கு அனுமதிக்கும் உடன்பாடான கொள்கையோடு பல காலம் பிரித்தானியா செயற்பட வேண்டியிருந்தது என்று பலர் கருதுகின்றனர்.

(தொடரும்)

நாமும் நமது இல்லமும் 657

கனடியர்களின் அடமானக்கடன் $2.16 ரில்லியன்

ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடிய அடமானக்கடன் மற்றும் ஆதன நிறுவனம் (Canada Mortgage and Housing Corporation) பெப்ரவரி (February) 2024இல் கனடியர்களின் மொத்த ஆதன அடமானக்கடன் $2.16 ரில்லியன் (1 Trillion = 1000 Billion) ஆக அதிகரித்துள்ளது எனத் தெரிவித்துள்ளது. கடந்த 23 வருடங்களில் இந்த மாதமே கனடியர் எடுத்த அடமானக்கடனின் பெறு மதி, குறைந்த கடன் அதிகரிப்பாக உள்ளது. அடமானக்கடனின் அதிக வட்டி வீதத்தால் அடமானம் பெறுவது குறைந்து வருவதனையும் காணலாம். எனினும் 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024 பெப்ரவரி 3.4%இனால் அடமானக்கடன் அதிகரித்துள்ளது.

மத்திய வங்கி வட்டிவீதத்தை இறக்க ஆரம்பித்திருப்பதாலும் கனடிய மக்களின் சனத்தொகை அதிகரிப்பினாலும் எதிர் காலத்தில் அதிக அடமானக் கடனைக் கனடியர்கள் பெறுவர் என எதிர்பார்க்கலாம்.

மொத்த அடமானத்தில் 15%ஆன அடமானக் கடன்கள் மாறுகின்ற வட்டி வீதத்தில் (Variable Mortgage Rate) இன்றைய காலகட்டத்தில் உள்ளதாகத் தெரிய வருகின்றது.

மேலதிக வட்டிவீத இறக்கத்தை எதிர்பார்த்து, பலர் மாறுகின்ற வட்டி வீதத்தைத் தெரிவு செய்வதனைக் காணலாம்.

எனினும், 3 வருட மற்றும் 5 வருடத்துடன் கனடியர்களுக்கு மாறாத, வட்டிவீத அடமானக்கடன் (Fixed Mortgage Rate) மிகவும் பிரசித்தி பெற்று பரீட்சயமாகவும் உள்ளது. இன்று

40%ஆன கடன்கள் 3 வருடம் அல்லது 5 வருடத்திற்கான மாறாத வட்டிவீதமாக உள்ளது.

மூன்று வருடத்திற்குரிய மாறாத வட்டி வீதம் 5%இற்குக் குறைவாகப் பெறக் கூடியதாக உள்ளது. அண்மைக்காலத்தில் இது சிறந்த வட்டிவீதம்.

கனடிய ஆதனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மத்திய அரசு புதிய திட்டத்தைத் தெரிவித்துள்ளது. ஏற்கனவே மத்திய அரசால் உடமையாக வைத்திருக்கும் பல நிலங்கள் ஏறக்குறைய 613 நிலப்பரப்புகளை ஆதனம் நிர்மாணிப்பதற்கான நிலமாக மாற்றலாம் என்ற திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெரிய நிலப்பரப்பில் சிறிதான, ஒன்று அல்லது இரு அடுக்காக உள்ள சில கட்டிடங்கள் மட்டுமே இப்பொழுது உள்ளன. இவ்வாறுள்ள நிலப்பரப்புகள் 'Lazy Land' என அழைக்கப்படுகின்றது. பெரியளவில் இவ்வாறான நிலப்பரப்பைக் கனடா போஸ்ட் (Canada Post) போன்ற நிறுவனங்கள் தமது தபால்களை பிரித்தெடுக்கும் தேவைக்கான கட்டிடமாகவும், சில பகுதிகளில் வாகனத்தரிப்பு நிலங்களாகவும், பழைய தபால் நிலையங்கள் (Post Office) என நாடு முழுவதும் பரந்து கிடக்கின்றன. இவ்வகையான நிலத்தைக் குறைந்த விலையில் விற்கக்கூடிய ஆதனங்களை நிர்மாணிக்கப் பாவிக்கலாம் என முன்மொழியப்பட்டுள்ளது.

நடைமுறையில், இவ்வாறாக குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களை அரசு மீள எடுத்து, ஆதனமாகக் கட்டி முடிப்பதற்கு நீண்டகாலம் எடுக்கும்.

மூன்று அரசுகளும் சேர்ந்து விரைவாகச் செயல்பட்டால் 250,000 ஆதனங்கள் குறிப்பிட்ட காலத்தில் நிர்மாணிக்க முடியும். இதற்குக் குறைந்தது ஏழு (7) வருடங்களாவது எடுக்கும் என இந்தத் தொழிலில் தேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

CMHCஇன் அறிக்கையிலிருந்து 2030இற்குள் குறைந்தது 3.5 மில்லியன் ஆதனங்கள் கட்டப்பட்டால் மட்டுமே சாதாரண மக்களாலும் வாங்கக்கூடிய நிலைமை ஏற்படலாம். அவ்வாறு ஒரு நிலைமை ஏற்படாவிட்டால் ஆதனத்தின் விலையும், வாடகையின் பெறுமதியும் அதிகரிக்கவே செய்யும். இதனால் கனடியர்களின் வாழ்க்கைமுறை மேலும் சிரமமடையலாம்.

ஒன்ராறியோ அரசின் முன்மாதிரி

(நன்றி: G&M.06.14.2024)

ஒன்ராறியோ மாகாண அரசு அதிகமான ஆதனங்களை நிர்மாணிப்பதற்கான காலத்தைக் குறைப்பதற்காக சில சட்டத் திருத்தங்களைச் செய்துள்ளது. இதனால் உள்ளூராட்சி அரசுகளில் பெறும் உத்தர வாதக் காலம் குறைக்கப்படுகின்றது. ஒரு கட்டிடத்தில் நான்கு (4) வாழ்விடங்கள் (4 Plexes) அமைப்பதற்கான நகர சபையின் ஒப்புதல் தேவையில்லை.

ஒரு கட்டிடத்தில் 10 வரையான மனைகள் அமைப்பதும் இலகுவாக்கப்பட்டுள்ளது. (Mini - Mid Rise Building)

இதனால் 10 வரையான மனைகள் கட்டுவதற்கான நகரசபையின் ஒப்புதலும் சில சட்டங்களுடன் நீக்கப்பட்டுள்ளது. (Site Plan Approval)

இவ்வாறான மாற்றங்கள் அதிக மனைகள் உருவாக்கக்கூடிய சந்தப்பங்களை உருவாக்கியுள்ளது.

உள்ளங்கைகளுக்குள் ஒரு ஹைக்கூ கவிதை நூல்

மூன்று வரி ஜப்பானிய ஹைக்கூ கவிதைகள், இன்றைக்கு தமிழில் பலராலும் எழுதப்படும் பிரபலமான கவிதை வடிவமாக இருக்கிறது. மகாகவி பாரதியார் எழுதிய சிறு கட்டுரை ஒன்றின் வழியே (சுதேசமித்திரன் - 16.10.1916) தமிழில் முதன்முதலாக அறிமுகமான ஹைக்கூ கவிதைகள், தமிழின் மூத்த - இளைய கவிஞர்களைத் தன்பால் ஈர்த்து எழுதத் தூண்டியது.

தமிழில் ஹைக்கூ கவிதைகள் அறிமுகமாகி, ஒரு நூற்றாண்டினைக் கடந்திருக்கும் நிலையில், இதுவரை 500-க்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன. தமிழ் ஹைக்கூ கவிதைகளைத் தொடர்ந்து எழுதிவரும் மு.முருகேஷ், இதுவரை 11 ஹைக்கூ நூல்களை வெளியிட்டுள்ளார். 1993இல் உள்ளங்கை அளவிலான இவரது 'விரல் நுனியில் வானம்' ஹைக்கூ கவிதை நூல் வெளியாகி, மூன்றே மாதத்தில் அனைத்து நூல்களும் விற்றுத் தீர்ந்தன.

தனது ஒவ்வொரு ஹைக்கூ நூலையும் புதுமையான வடிவ அமைப்பில் வெளியிட்டுவரும் மு.முருகேஷ், 1999இல் நீள வடிவிலான 'தோழமையுடன்' எனும் ஹைக்கூ நூலினையும், 2000இல் 'ஹைக்கூ டைரி' எனும் ஹைக்கூ டைரியுடன் இணைந்த நூலையும் கொண்டு வந்தார். 2010இல் 'உயிர்க் கவிதைகள்' எனும் வண்ணப் புகைப் படங்களுடன் கூடிய ஹைக்கூ வெளியிட்டார். இவரது ஹைக்கூ கவிதைகள் இந்தி, மலையாளம், தெலுங்கு, ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 110 ஹைக்கூ கவிதைகள் மலையாளத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு, 'நிலா முத்தம்' எனும் நூலாக வெளிவந்துள்ளது. பெங்களூருவில் 2008 ஆம் ஆண்டு (பிப்.23-25) நடைபெற்ற உலக ஹைக்கூ கிளப் 9ஆவது மாநாட்டில் நடத்தப்பட்ட ஹைக்கூ கவிதைப் போட்டியில் பங்கேற்று மு.முருகேஷ் எழுதிய ஹைக்கூ ஒன்று வெற்றிப்பெற்று, உலக மொழிகளிலெல்லாம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

2019 டிசம்பரில் 'குக்கூவென...' எனும் மிகச் சிறிய ஹைக்கூ கவிதை நூலினைக் வெளியிட்டுள்ளார். 4.8 செ.மீ உயரமும், 4.5 செ.மீ அகலமும் கொண்ட இந்தக் குறுநூல், தமிழில் இதுவரை வெளியான கவிதை நூல்களிலேயே மிகச் சிறிய நூலாக இருக்கிறது. லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம்பெறுவதற்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள இந்நூலின் ஆசிரியர், கவிஞர் மு.முருகேஷ் கூறும்போது "எனது ஹைக்கூ நூல்கள் ஒவ்வொன்றும் ஏதாவதொரு புதுமையான வடிவத்தில் இருக்கும். மத்திய அரசின் சாகித்திய அகாதெமி அழைப்பின் பேரில், 2010ஆம் ஆண்டில் கொல்கத்தா சென்றிருந்தபோது, அங்கே சிறிய நூல் ஒன்றை வாங்கி வந்தேன். அதைவிடச் சிறியதாக ஒரு நூலை வெளியிட வேண்டுமென்கிற ஆவலில், பல அச்சகங்களையும் பைண்டிங் சென்டர்களையும் தொடர்புகொண்டு விசாரித்தேன். பலரும் இது முடியாது, செலவு அதிகமாகும் என கை விரித்துவிட்ட நிலையில், புக் மேக்கர் நிறுவனத்தைச் சேர்ந்த ஆதித்யா, "முயற்சிக்கலாம்..." என்று சொல்லி, இந்தத் தமிழின் மிகச் சிறிய கவிதை நூலை வடிவமைத்துக் கொடுத்துள்ளார். 'மூன்று வரி ஹைக்கூ கவிதைக்கு ஏற்ற சரியான வடிவமிது' என்று பலரும் பாராட்டுவது, இந்த நூலுக்காகவெனப் பட்ட சிரமங்களை மறக்கச் செய்வதாக உள்ளது.

இந்தச் சிறிய நூலைப் பார்க்கும் பலரும் வியந்து பாராட்டுகின்றனர். மூத்த எழுத்தாளர் கி.ராஜாநாராயணன் நூலைக் கையில் வாங்கும்போதே, "அட... குட்டியூண்டு பொஸ்தவம்..!" என்றார். தமிழ்நாடு மாநில கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையரும் எழுத்தாளருமான மு.ராஜேந்திரன் ஐஏஎஸ், "அழகான - கவித்துமான நூல்" என்று பாராட்டினர். "இந்த நூலே ஒரு ஹைக்கூதான்..!" என்று நெகிழ்ந்தார் கவிஞர் ஈரோடு தமிழன்பன். "அட்டகாசமாக இருக்கே... கவிஞரே..!" என்று சொல்லி மகிழ்ந்தார் திரைப்பட பாடலாசிரியர் யுகபாரதி.

ஜனவரி 2020இல் 47ஆவது சென்னை புத்தகக் கண்காட்சியில் இந்த நூல் விற்பனைக்குக் கிடைக்கும்" என்று கவிஞர் மு.முருகேஷ் கூறியிருந்தார்.

பிரபாகரனுக்கு குண்டு துளைக்காத கவச உடை கொடுத்த ராகுல் காந்தி! மணிசங்கர் அய்யர் சொல்லும் புது தகவல்

கண்ணன்

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி குறித்து, ராஜீவ்காந்திக்கு மிக நெருக்கமானவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவரும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் இந்திய ஒன்றிய அமைச்சருமான மணிசங்கர் அய்யர் எழுதியிருக்கும் 'The Rajiv I Knew' (நான் அறிந்த ராஜீவ்) என்ற நூல், 2024ஆம் ஆண்டு ஜனவரியில் வெளியானது. இந்த நூலை ஜக்கர்நாட் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது கையெழுத்தான ஒப்பந்தங்கள், சர்ச்சைகள், வெளியுறவுத் துறைக் கொள்கை முயற்சிகள், உள்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் ஆகியவை குறித்து இந்த நூலில் விரிவாகப் பேசியுள்ளார் மணிசங்கர் அய்யர். குறிப்பாக, இந்தியா - இலங்கை ஒப்பந்தம் குறித்து சில நுணுக்கமான தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இந்திய அமைதி காக்கும் படையை (Indian Peace Keeping Force - IPKF) அனுப்பியது மிக மோசமான முடிவு எனக் குறிப்பிடும் மணிசங்கர் அய்யர், இந்திய அமைதி காக்கும் படையை அனுப்ப இந்தியா எப்படி ஒப்புக்கொண்டது என்பது குறித்தும் ஒரு புதிய தகவலைச் சொல்கிறார்.



“ராஜீவ் - ஜெயவர்தனே ஒப்பந்தம் கையெழுத்தானதும் அருகிலிருந்த அறைக்குள் ராஜீவை அழைத்துச் சென்றார் இலங்கை அதிபர் ஜெயவர்தனே. நாட்டின் இரு முனைகளிலும் நிகழும் இருவேறு உள்நாட்டுக் கலகங்களை இலங்கை ராணுவத்தால் சமாளிக்க முடியாது என்பதை ராஜீவிடம் தெரிவித்தார் ஜெயவர்தனே. தலைநகர் கொழும்பில் நடக்கும் வன்முறைகளைக்கூட ராணுவத்தால் சமாளிக்க முடியாது என்றார். ஆகவே, ஆயுதம் ஏந்திய தமிழ்க் குழுக்களிடம் இருந்து இலங்கை ராணுவத்தைப் பாதுகாக்க ஒரு அமைதி காக்கும் படையை அனுப்ப வேண்டும் என்றார் ஜெயவர்தனே. தன் மூத்த அமைச்சர்களின் எதிர்ப்பையும் மீறி, இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த ஒப்புக்கொண்டதற்காக, தனக்கு ராஜீவ்காந்தி இதனைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் ஜெயவர்தனே. அந்தத் தருணத்தில் அந்த அறைக்கு வெளியில் காத்திருக்கும் தன் நிபுணர்களைக்கூடக் கலந்தாலோசிக்காமல் அதற்கு ராஜீவ்காந்தி ஒப்புதல் அளித்தார். அதற்குப் பிறகு, இந்த வேண்டுகோள், ஒப்பந்தத்தின் இணைப்பாகச் சேர்க்கப்பட்டது. இலங்கை அரசே கேட்டுக்கொண்டாலும் இலங்கையில் இந்தியா ராணுவ ரீதியாகத் தலையிடாது என்ற இந்திரா காந்தியின் நிலைப்பாடு மறு பரிசீலனை செய்யப்பட்டு, படைகளை அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

ராஜீவ்காந்தியின் முடிவைக் கேட்டு இந்தியாவில் இருந்த நிபுணர்கள் ஆச்சரியமடைந்தனர். ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, இவ்வளவு அவசரத்துடன் இம்மாதிரி பிரிவுகள் ஒப்பந்தத்தில் சேர்க்கப்படும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால், ராஜீவ் காந்தி முடிவெடுத்து, உடனடியாகச் செயல்படுத்திவிட்டார்.

ஜெயவர்தனேவின் வேண்டுகோளை ஏற்றதற்கான விலையை ராஜீவ் அடுத்த சில நிமிடங்களிலேயே தரவேண்டியிருந்தது. பிரதமருக்கு கடற்படையினரின் பாரம்பரிய மரியாதை (Guard Of Honour) அளிக்கப்பட்டபோது, ஒரு கடற்படை வீரர் தனது துப்பாக்கியின் பின்பக்கத்தால்



ராஜீவ்காந்தியைத் தாக்கினார். அந்தத் தாக்குதலில் ராஜீவ் காந்தியின் தலை நொறுங்கி, அந்த இடத்திலேயே அவர் கொல்லப்பட்டிருப்பார். ஆனால், தாக்குதல் வருவதை உணர்ந்துகொண்ட பிரதமர் விலகிக்கொள்ளவே, அடி தோள் பட்டையில் விழுந்தது.

இந்தச் சம்பவத்திற்குச் சில மணி நேரங்களுக்குப் பிறகு பிரதமரின் விமானம் தில்லியில் தரையிறங்கியது. உள்நாட்டுப்

தொடர்ச்சி 20 ஆம் பக்கம்

நானிலம் போற்றும் நட்பு - 47

- அகணி -
authorakani@gmail.com

"சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்." (அதிகாரம் கூடா நட்பு, குறள் 827) என்ற குறளிற்கு "வில்லின் வணக்கம் வணக்கமாக இருந்தாலும் தீங்கு செய்தலைக்குறித்தமையால், பகைவரிடத்திலும் அவருடைய சொல்லின் வணக்கத்தை நன்மையாகக் கொள்ளக் கூடாது" என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"வில்லின் வளவைப்போல், பகைவரின் பணிவான சொல்லும் தீமை தரும். ஆகவே அதனை நம்புதல் கூடாது" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"வில் வணக்கம் தீங்கு தருவதுபோல், பகைவரின் பணிந்த சொல் தீமையைத் தரும்." என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"பகைவரிடம் காணப்படும் சொல் வணக்கம் என்பது வில்லின் வணக்கத்தைப்போல் தீங்கு விளைவிக்கக் கூடியது என்பதால், அதனை நம்பக் கூடாது" என்று உரையாசிரியர் கலைஞர் அவர்கள் உரை தந்துள்ளார்.

பகைவரின் பணிவான சொல்லும் தீமை தரும் என்ற அறிவுரையை இந்தக் குறள் எடுத்துக் கூறுகின்றது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் எண்பத்தி ஐந்தாவது பாடலைக் கவனிப்போம். இப்பாடல் வடமன் என்னும் புலவரால் பாடப்பட்டது. தலைவனிடமிருந்து தூது வந்த பாணன், தலைவனை நல்லவன் அன்புள்ளவன் என்று புகழ்ந்தான். அதனைத் தோழி மறுத்துரைத்தாள். தோழி கூற்று. இது மருதத்திணை சார்ந்தது.

பரத்தையர் இன்பத்தை நாடிச் சென்ற தலைவன் பல நாட்கள் அங்கே தங்கிவிட்டான். வீடு திரும்பவில்லை. அதனால் தலைவி கோபமடைகின்றாள்.

ஒரு நாள் தலைவன் பரத்தையர் இன்பத்திலே வெறுப்படைந்து, தன் இல்லத்திற்குத் திரும்ப விரும்பினான். தலைவி தனது செய்கையால் கோபம் கொண்டிருப்பாள் என்பது அவனுக்குத் தெரியும். ஆதலால் தலைவியின் கருத்தை அறிந்து வருமாறு அவனுக்கு வேண்டிய பாணன் ஒருவனைத் தூதாக அனுப்பி வைத்தான்.

தூதாக வந்த அந்தப் பாணன் தலைவியின் இல்லத்தை அடைந்தான். தோழியைக் கண்டான். "தலைவன் தான் செய்த தவறுக்காக வருந்துகின்றான். வீட்டுக்கு வர விரும்புகின்றான். தலைவியைக் காணவேண்டும் என்று தவிக்கின்றான். அவன் தலைவியின்பால் மிகவும் அன்புள்ளவன். அவன் தன் அன்பை மறந்துவிட்டான் என்று நினைக்காதீர்கள். அவனைப் போன்ற அன்புள்ளவர்கள் வேறுயாருமேயில்லை. ஆதலால் தலைவி அவனை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். பாணன் உரைத்த இச்சொற்களைக் கேட்ட தோழி அவனுக்குக் கூறுகின்றாள்.

"யாரினும் இனியன் பேர் அன்பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூல்முதிர் பேடைக்கு ஈன்இல் இழைஇயர்
தேம் பொதிக் கொண்ட தீம்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன் பாணர் வாயே."

இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

"துள்ளுநடை போடும் சேவற்கோழி, கரு முற்றிய தன் பெட்டைக் கோழிக்காக, முட்டை இடுவதற்கான இடத்தை அமைக்கும் பொருட்டு, தேனை உள்ளே கொண்டிருக்கின்ற இனிய கோல் வடிவான கரும்பினது, மணமற்ற வெண்மையான மலரை, மூக்கினால் கோதிக் கொண்டுவரும். புதிய வருமானங்களையுடைய ஊரின் தலைவனை, எல்லோரையும்விட நல்லவன், மிகுந்த அன்புள்ளவன் என்று கூறுவது, பாணனது வாயளவில்தான். உண்மையில் அப்படிப்பட்டவன் அல்லன் அவன்."

பாணன்தான் தலைவனை நல்லவன் அன்புள்ளவன் என்று சொல்கிறான். உண்மையில் அத்தகையவன் அல்லன் என்று தோழி கூறுகிறாள்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் எண்பத்தி ஆறாவது பாடலைக் கவனிப்போம். இப்பாடல் வெண்கொற்றன் என்னும் புலவர் பாடிய பாட்டு. தோழியைப் பார்த்துத் தலைவி உரைத்தது. தலைவரோடு இணைந்திருந்து இன்பம் கொள்ளவேண்டிய இந்தக் கூதிர்கால நள்ளிரவிலே நான் தனித்திருக்கின்றேன். எருதின் மணியோசையைக் கேட்டுக்கொண்டு இது போன்றிருப்பவர் என்போல் எவரேனும் இருப்பார்களோ என்று சொல்லி வருந்தினாள். இது மருதத்திணை சார்ந்தது.

உடல் நடுங்கும் நல்ல குளிர்காலம் இரவுப் பொழுது, இரவிலும் நடுச் சாமம் அதாவது நள்ளிரவு, கணவனைப் பிரிந்த ஒரு காதலி தனித்து உட்கார்ந்து கொண்டிருக்கின்றாள். ஊரெல்லாம் உறங்கிக் கிடக்கின்றது. ஒருவித ஒலியும் இல்லை. மாடுகளின் கழுத்திலே கட்டியிருக்கும் சிறிய மணிகளின் ஓசை மட்டும் மெதுவாகக் கேட்கின்றது. இந்த ஓசையைக் கேட்டுக்கொண்டு தூக்கமின்றித் துக்கத்துடன் உட்கார்ந்திருக்கின்றாள் தலைவி.

அவளுடைய தோழி தலைவியின் துக்கத்தைக் கண்டு தானும் வருந்தினாள். தலைவன் பிரிந்ததனால்த்தான் இவளுக்கு இத்துக்கம் உண்டாயிற்று. அவன் வரும் வரையிலும் இவள் இத்தனிமைத் துயரை எப்படித்தான் பொறுத்துக் கொண்டிருக்கப் போகின்றாளோ? இம்மாதிரி இரவிலும் உறக்கமில்லாமல் உட்கார்ந்திருந்தால் இவள் உடம்புதான் எதற்காகும் என்று வருந்தினாள். இப்படி வருந்துகின்ற தோழியைப் பார்த்துத் தலைவி கூறுகின்றாள்.



"சிறைபனி உடைந்த சேய் அரி மழைக்கண்
பொறை அரு நோயொடு புலம்பு அலைக் கலங்கிப்
பிறரும் கேட்குநர் உளர் கொல்? உறை சிறந்து
ஊதை தூற்றும் கூதிர் யாமத்து
ஆன் நுளம்பு உலம்பு தொறும் உளம்பும்
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே."

இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

"மழைத்துளி மிகுந்து, வாடைக்காற்று மிகுதியாக வீசுகின்ற, கூதிர் யாமத்து - இந்தக் குளிர்காலத்து நள்ளிரவிலே, கொட்டகையில் கட்டியிருக்கும் எருது, அதன்மேல் மொய்க்கும் ஈ ஒலிக்கும் போதெல்லாம், தன் தலையை ஆட்டுவதனால் அசையும், நாவினால் கூறும் கொடிய மணியின், மெல்லிய ஓசையை, தடுக்கப்பட்ட கண்ணீர் உடைந்து சிந்துகின்ற, சிவந்த, ரேகையையும் குளிர்ச்சியையும் உடைய கண்களுடனும், பொறுக்கமுடியாத காம நோயுடனும், தனிமைத் துன்பமும் சேர்ந்து வருத்துவதனால் கேட்டுக்கொண்டு உறங்காமல் இருப்பவர், வேறு ஒருவரும் உண்டோ?"

"தலைவரோடு கூடியிருந்து மகிழத்தக்க இச்சமயத்தில் நான் தனித்திருந்து வருந்துகிறேன்" என்று தலைவி தனது துயரத்தைத் தோழியுடன் பகிர்ந்து கொள்கிறாள்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் தொண்ணூறாவது பாடலைக் கவனிப்போம். இப்பாடல் மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதன் என்பவர் பாடிய பாட்டு. "தலைவனுடன் கொண்ட நட்புக் காரணமாக உன் உடம்பு இளைத்தது. ஆயினும் நீ அவனிடம் கொண்ட அன்பிலே குறையவில்லை", என்று தோழி தலைவியைப் பார்த்து உரைத்தது. இது குறிஞ்சித்திணை சார்ந்தது.

தலைவன் நெடுங்காலமாக தலைவியுடன் பழகி வந்தான். அவனும் அவளும் காதலன் காதலிகளாக வாழ்ந்து வந்தனர். ஆனால் வெளிப்படையாக அவர்கள் இன்னும் இல்லறத்திலே நுழையவில்லை. களவு மணவாழ்வுதான் அவர்கள் வாழ்வு.

அவர்கள் இன்னும் இப்படியிருப்பது தோழிக்குப் பிடிக்கவில்லை. விரைவில் அவர்களை வெளிப்படையாகக் குடும்பம் நடத்துவோராகச் செய்துவைக்க வேண்டும் என்பதே அவள் சிந்தனை.

ஒரு நாள் அக்காதலன் தலைவியைக் காணுவதற்காக வேலிப் புறத்திலே வந்து நின்றான். அப்பொழுது அவன் காதிலே விழும் வகையில் தலைவியிடம் சில ஆழ்ந்த கருத்தமைந்த சொற்களைக் கூறினாள் தோழி.

"எற்றோ! வாழி தோழி! முற்றுப்
கறிவளர் அடுக்கத்து இரவின் முழங்கிய
மங்குல் மாமழை வீழ்ந்தெனப் பொங்கு மயிர்க்
கலைதொட இழுக்கிய பூநாறு பலவுக்கனி
வரையிழி அருவி உண்துறைத் தரூஉம்
குன்றநாடன், கேண்மை,
மென்றோள் சாய்த்தும், சால்பு ஈன்று அன்றே."

இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.
"மிளகுக் கொடிகள் வளர்ந்திருக்கின்ற மலைப் பக்கத்திலே. கருமுதிர்ந்து, இரவிலே இடியிடித்த மேகங்கள், பெரிய மழையைப் பெய்தன. உடம்பெல்லாம் நிறைந்த மயிரையுடைய ஆண் குரங்கு, தொட்டதனால் நழுவி விழுந்த, பூவைப்போல் மணம் வீசுகின்ற பலாக்கனியை, மலையிலிருந்து விழுகின்ற அருவியானது ஏந்திக் கொண்டுவந்து. ஊரார் நீர் உண்ணும் துறையிலே கொடுக்கும் மலைநாட்டுத் தலைவனுடன் நீ கொண்ட நட்பு, உனது மென்மையான தோள்களை இளைக்கும்படி செய்துங்கூட, அமைதியையே தந்தது. இது எப்படியோ அறியேன். வாழ்க தோழியே."

மலைநாட்டுத் தலைவனுடன் கொண்ட நட்பால் நீ மெலிந்தாய்! ஆயினும் உன் இயல்பு கெடவில்லை.

இந்தப் பாடல்களில் நட்பின் பெருமை நன்கு புலப்படுகிறது.
நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

எழுத்தாளர் கவிஞர் தாமரை



T. சிவபாலு

கவிதை உலகில் மட்டுமன்றி எழுத்துத் துறையோடு அரசியல்துறை உட்பட மேடைகளில் வலம்வரும் ஒரு தமிழகப் பெண் எழுத்தாளர் தாமரை என்று குறிப்பிடத்தக்க அளவிற்கு தனக்கென ஒரு தனியிடத்தைத் தக்கவைத்துக் கொண்டவர் கவிஞர் தாமரை எனலாம். இளமைக் காலந்தொட்டே கதை, கவிதை, நாடகம் என வாசிப்புத்துறையில் மிக ஈடுபாடு கொண்டவர். அவ்வாறாக அவர் இருந்தமைக்கு அவரது தந்தையும் தாயும் கோவையில் ஆசிரியர்களாக இருந்ததே தாமரையின் கல்விக்கு வித்திட்டது. தாமரையின் வாசிப்பு ஆர்வம் தந்தையை மகிழ்வித்தது. பாடசாலைக் கல்வியில் படுசுட்டியாக இருந்த தாமரை பொறியியலாளராகக் கற்றுத் தேறினார். தந்தை ஆசிரியராக மட்டுமன்றி கவிஞராகவும் நாடக எழுத்தாளராகவும் இருந்தமையும் அவரது கவிதை, நாடக எழுத்துலக பிரவேசத்திற்கு அடிப்படையாக விளங்கியது. தமது இளமைக்காலம் பற்றித் தாமரை பின்வருமாறு நினைவுகூருகின்றார்: "ஏழு வயதிலேயே கதைப் புத்தகங்கள் படிக்க ஆரம்பித்தவள் நான். எங்களை வளர்த்த பெரியம்மா, என்னையும் அண்ணனையும் அடிக்கடி திரைப்படங்களுக்கு அழைத்துச் செல்வார். திரைப்படத்திற்குப் போகும் வழியில் அப்பா புத்தகங்களோடு எதிரே வந்தால் திரைப்படத்தைக் கைவிட்டு அப்பாவுடன் வீடு திரும்புவேன். தெருவிலேயே படித்துக்கொண்டு வருவேன் என்பதால் அப்பா என்னைத் தூக்கிக்கொள்வார். என் படிப்பார்வம் அப்படிப்பட்டது.

படிப்பறிவு பெற்றதில் என் பெற்றோர் முதல் தலைமுறையினர். அம்மா பள்ளியில் படிக்கும்போது மாலையில் பலகாரம் விற்க நேர்ந்ததையும், கல்லூரியில் சேர்ந்த பிறகும் அப்பா தறி நெசவு செய்ய நேர்ந்ததையும் சிறுவயதில் தெரிந்துகொண்டதால் நான், அண்ணன், தங்கை மூவருமே படிப்பு விடயத்தில் படுசுட்டியாக இருந்தோம். பெற்றோர் கோவையில் ஆசிரியர்களாகச் சாதாரண நிலையில் இருந்தாலும் எங்களைக் கொஞ்சமும் வறுமை தெரியாமல் வளர்த்தனர்.

பள்ளியில் சேர்ந்தபோது அண்ணனை விட்டுப் பிரியமாட்டேன் என்று அழுததால் பல மாதங்கள் அவனுடனே இரண்டாம் வகுப்பில் உட்கார வைத்தனர். முதலில் இரண்டாம் வகுப்புப் படித்துவிட்டு பின்னர் முதல் வகுப்புக்கு வந்ததாலோ என்னவோ, எப்போதுமே படிப்பு விடயத்தில் இரண்டுபடி முன்னதாக இருந்தேன். டபுள் பிரமோஷன் கொடுக்கலாம் என்று யோசித்தவர்கள் வயது விடயத்தில் சிக்கல் எழலாம் என்பதால் அது கைவிடப்பட்டது." என்று பள்ளிக்காலத்தை அசைபோடுகின்றார். அது மட்டுமன்றி பள்ளிக்காலத்தில் சாதாரண பெண்களைப் போலன்றி வித்தியாசமானவராக அவர் நடந்து கொண்டமையையும் குறிப்பிடத் தவறவில்லை. "சிறு வயதிலிருந்தே எனக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது. யாரும் சொல்லித்தரவில்லை. கும்பிட்டாலும் கும்பிடாவிட்டாலும் எல்லோர் வாழ்க்கையிலும் எல்லாமும் நடந்துகொண்டுதான் இருக்கிறது என்பது எப்படியோ அந்த வயதில் தெரிந்துவிட்டது. அதேபோல் விலங்குகளைத் துன்புறுத்துவதையும் தாங்கிக்கொள்ள முடியாதிருந்தது. புலால் மறுப்பு இயல்பாக வந்துவிட்டது. பட்டுப்பூச்சிகளைக் கொன்று செய்கின்றனர் என்பதால் பட்டாடை அணிய மறுத்துவிட்டேன். சாதி, அர்த்தமற்ற சடங்குகள், மதத்திணிப்பு, பெண்கள் ஆண்களுக்குக் கீழேதான் என்பது ஆகியவற்றை எப்போதும் எதிர்த்தேன். பிடிவாதக்காரி என்று பெயர் வந்துவிட்டது. வீட்டில் நான் தனித்தீவு. என் எண்ணங்கள் எல்லாமே, சமூகம் ஒரு குடும்பத்திற்கு, குறிப்பாகப் பெண்களுக்கு விதித்திருந்த விதிகளுக்கு எதிராகவே இருந்தது." என அவர் வாலிபத்து நினைவலைகளை இரை மீட்கின்றார்.

கவிதை எழுதுவதில் மிகவும் திறமை படைத்தவர். 'ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும்' என்ற கவிதைத் தொகுப்பைத் தந்து சிறந்த கவிஞர் என்பதனை நிறுவியவர். 'சந்திரக்கற்கள்', 'என் நாட்குறிப்பின் நடுவிலிருந்து சில பக்கங்கள்' என்னும் சிறுகதைத் தொகுப்புக்கள் அவரின் கதை எழுதும் ஆற்றலை வெளிப்படுத்தியவை.

'தென்றல் எந்தன் நடையைக் கேட்டது' என்ற பாடல் வரிகளின் உடமையாளரான தாமரை 'இனியவளே' என்ற திரைப்படத்திற்காக எழுதிய பாடலால் மேலும்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

BASEMENT FOR RENT

MORNINGSIDE & SHEPPARD
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance & Wifi. Close to TTC & all facilities. Couple / female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.534.4129**

MARTIN GROVE & ALBION
2 Bedrooms walkout bsmt for rent. Sep. entrance. No pet & no smoke. Avail. July 15, 2024.
தொடர்புகளுக்கு: **416.746.7367**

MARKHAM & ELLESMERE
2 Bedrooms bsmt for rent. 1 Washroom, Sep. entrance, 1 Parking & Laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.271.5420**

NEILSON & FINCH
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & sep. laundry. Close to TTC & Eraa supermarket. Avail. immediately.
416.292.5871/647.868.5871

MORNINGSIDE & NIGHTSTAR
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance. Close to Eraa Supermarket. Single/ couple preferred. Avail. immediately.
647.656.1131/416.291.4340

MARKHAM & 14TH AVENUE
3 Bedrooms & 2 full washrooms bsmt for rent. Sep. entrance & sep. laundry. Close to school & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

MIDLAND & DANFORTH
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC & GO train. Single/ couple preferred. Avail. immediately.
647.674.3155 /647.284.5462

MCCOWAN & DENISON
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Small family / Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.5284**

KENNEDY & ELLESMERE
2 Bedrooms bsmt for rent. 1 parking. Also 2 Bedrooms bsmt in Stouffville. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.0010**

மேலும் பக்கங்கள் 13, 14, 15

34 ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com

BASEMENT FOR RENT

MARKHAM & LAWRENCE
2 Bedrooms renovated bsmt for rent. 1 parking. Close to Cedarbrae Mall, TTC, Schools, Banks & etc. Avail. immediately.
647.780.6500/ 416.289.3685

ROOM FOR RENT

MIDLAND & LAWRENCE
1 Bedroom for rent in a house with attached washroom. Close to TTC & all facilities. Avail. immediately.
647.763.8640/ 647.765.2743

MORNINGSIDE & SHEPPARD
1 Large master bedroom with attached washroom for rent in the main floor. Ladies only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.972.3710**

BRIMLEY & STEELES
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. Female only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.894.8349**

MARKHAM & EGLINTON
1 Bedroom for rent. Furniture included. Close to all facilities. Single or student female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.716.2718**

MORNINGSIDE & MCNICOLL
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. Male preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.763.9120**

MORNINGSIDE & MCNICOLL
1 Bedroom for rent in main floor. Close to bus stop, school & all facilities. Ladies only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.991.7307**

MARKHAM & ELLESMERE
Room for rent in a 2 bedrooms bsmt. Wifi available. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.996.6977**

ROOM FOR RENT

NEILSON & FINCH
Rooms for rent. Senior couple/ Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.427.4090**

TAUNTON & GARDENS (Whitby)
2 Bedrooms available in brand new town house. 1 Master bedroom with attached washroom. 1 Parking & utility. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.784.4649**

FINCH & NEILSON
1 Bedroom for rent. Female preferred. Wifi included. Close to eraa supermarket & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.1971**

TAPSCOTT & CROW TRAIL
1 Bedroom for rent in main floor. Working Female preferred. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **647.261.3482**

MARKHAM & LAWRENCE
1 Bedroom for rent in a house. Female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.0231**

9TH LINE & 14TH AVENUE
Rooms available for rent. Attached washroom, parking, laundry & internet. Close to YRT. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.566.9411**

சாப்பாட்டு வசதியுடன் கூடிய அறை உடனடியாக வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **647.667.0482**

MARKHAM & DENISON
TAPSCOTT & FINCH
1 Very large bedroom for rent. 2 Male preferred. No alcohol & no smoking. Avail. immediately.
647.507.2148/647.864.1051

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

ROOM FOR RENT

MIDLAND & STEELES
Steeles Roadஇல் **24 hours** பஸ் சேவையுடன், நடைதூரத்தில் தமிழ் கடை, **No Frills, Banks, etc.** அறை உடனடியாக வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **416.894.9309**

BASEMENT FOR RENT

COLLINS & HARMONY
2 Bedrooms brand new luxury bsmt for rent. Sep. entrance & 1 parking. walking distance to Bus, high school, university & etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.520.0496**

BASEMENT FOR RENT

MARKHAM & ELSON
1 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 washroom & 1 parking. Close to Bus, Costco & etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.805.3355**

BASEMENT FOR RENT

MORNINGSIDE & ELLESMERE
2 Bedrooms bsmt for rent. City permitted. Sep.entrance & 2 full washrooms. 10 Mins. walk to U of T. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.201.6075**

BASEMENT FOR RENT

MORNINGSIDE & FINCH
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. The buses runs across to the house. (939, 953 & 133)
தொடர்புகளுக்கு: **416.669.9254**

BASEMENT FOR RENT

MORNINGSIDE & MILITARY TRAIL
4 Bedrooms bsmt for rent. 2 full washrooms, Sep. entrance & parking. 24 Hrs. TTC. Avail. August 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.540.5853**

BASEMENT FOR RENT

MORNINGSIDE & OLDFINCH
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking. Couple/ family preferred. Close to all facilities. Avail. August 01,2024.
416.282.5376/ 647.992.5376

CONDO. FOR RENT

WARDEN & HWY 07
1 + Den Condo. for rent. 1 Parking. Close to HWY 407 & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.989.3804**

KENNEDY & HWY 401
1 + Den Condo. for rent. 1 Washroom & 1 parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.0010**

HOUSE FOR RENT

WARDEN & ELLESMERE
3 Bedrooms house for rent. Close to HWY 401, Go station & grocery stores. Family Preferred. Avail. immediately.
437.233.4848 / 416.274.5306

MARKHAM & PAINTED POST
3 Bedrooms house for rent. (upstairs only). Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.826.6575**

MIDLAND & EGLINTON
3 Bedrooms bangalow house for rent. Walking distance to TTC & subway station. Avail. immediately.
416.757.4735 / 416.528.9683

BASEMENT FOR RENT

TAUNTON & THICKSON
3 Bedrooms & 2 Full washroom brand new walk up bsmt for rent. Living room, kitchen, brand new all appliances & Sep. laundry. Family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.400.6569**

BASEMENT FOR RENT

SIMCOE & BRITANNIA
2 Bedrooms walkout bsmt for rent. Parking & laundry. 10 min walk to Ontario Tech University & Durham College. Avail. Avail. immediately.
647.764.5933/ 416.897.3903

BASEMENT FOR RENT

WILLIAM PARKWAY & JAMES POTTER
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking. Close to all facilities. Rent $2000 with utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.444.5864**

மேலும் பக்கங்கள் 12, 14, 15

BASEMENT FOR RENT

CASTLEMORE & ROY RAINEY (MARKHAM)
2Bedrooms +Den bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facili ties. Couple/family preferred. No pet & no smoke. Avail. August 01,2024.
தொடர்புகளுக்கு: **647.205.8317**

BASEMENT FOR RENT

MORNINGSIDE & ELLESMERE
2 Bedrooms brand new luxury bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1.5 washroom. Walking distance to Bus.Close to university. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.902.1758**

BASEMENT FOR RENT

MORNINGSIDE & MCNICOLL
2 Bedrooms renovated bsmt for rent. Sep. entrance. 5 Min. walk to schools & TTC bus stop (133, 53A, 939C, 953). Close to Oasis Blvd & Seasons Drive. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.999.7610**

BASEMENT FOR RENT

TAUNTON & HARMONY
New 2 Bedrooms bsmt for rent in Oshawa. Sep. washer dryer. Close to Durham college & UOIT. Wor king Couple / Students preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.732.2939**

ROOM FOR RENT

BRIMLEY & EGLINTON
1 Bedroom for rent in a 3 Bedroom bsmt. Sharing Kitchen & washroom. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:: **647.995.0038**

ROOM FOR RENT

WARDEN & ELLESMERE
1 Shared large bedroom for rent in a bsmt. Parking available. Male preferred. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.569.0657**

ROOM FOR RENT

ELLESMARE & MILITARY TRAIL
2 Rooms available for rent with attached washroom for each in walkout bsmt. Sep. entrance. Close to TTC. Walking distance to University & Centennial College.
647.551.1758 /647.446.8590

ROOM FOR RENT

MCCOWAN & 14TH AVENUE
2 Bedrooms with attached washroom for rent in a house. Internet. Female only. Food included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.731.3024**

ROOM FOR RENT

KINGSTON & SHEPPARD
வயதான பெண்மணிக்கு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **416.298.0134**

ROOM FOR RENT

MORNINGSIDE & STAINES
2 Bedrooms for rent. 1 Large room attached double sink washroom & double closet. Close to all facilities. Young family/ single preferred. Avail. immediately.
416.848.9697/647.888.9437

ROOM FOR RENT

MARKHAM & ELLESMERE
Bungalow houseஇல் அறை வாடகைக்கு உண்டு. பெண்கள் முதியோர்/ விரும்பத்தக்கது. Avail. August 01,2024.
தொடர்புகளுக்கு: **416.271.1727**

ROOM FOR RENT

VICTORIA PARK & LAWRENCE
1 Bedroom for rent in 3 bedroom bsmt in bungalow house. Newly sep. wash room, Sep. entrance. Close to TTC. Female only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.831.3784**

ROOM FOR RENT

SCAR.GOLF CLUB & LAWRENCE
Room for rent. Parking available. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.454.9986**

ROOM FOR RENT

MORNINGSIDE & ELLESMARE
1 Bedroom for rent in a Condo.. Sep. washroom, Shared kitchen, laundry & free Internet. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.879.3650**

ROOM FOR RENT

MARKHAM & STEELES SCARBOROUGH
Room availble for rent. Suitable for small family / Female. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **289.923.1391**

HOUSE FOR RENT

MARKHAM & HIGHGLEN
4 Bedrooms house for rent. Parking avilable. Close to School & Shopping facilities. Avail. August 01, 2024.
தொடர்புகளுக்கு: **905.471.7667**

HOUSE FOR RENT

BROCK & TAUNTON
4 Bedrooms & 3 Washrooms fullhouse for rent. Close to Whitby Go station & grocery stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.972.5478**

HOUSE FOR RENT

WARDEN & LAWRENCE
3 Bedrooms house for rent. Family preferred. 3 Parking & internet. Also 3 bedrooms house for rent. Male Preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.740.8762**

HOUSE FOR RENT

COBURG
2 Bedrooms Semi-detached bungalow for lease. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.556.4881**

HOUSE FOR RENT

MARKHAM & ELLESMERE
3 Bedrooms & 1 full washroom ban galow house main floor for rent. 5 min. walking distance to Bus, school, bank, mall, HWY 401 & other facilities. Avail. August 01,2024.
தொடர்புகளுக்கு: **647.996.6977**

HOUSE FOR RENT

WARDEN & ELLESMERE
3 Bedrooms house for rent. 1 Parking. Close to all faci lities. Avail. August 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.808.0406**

வாடகைக்கு
4 BR, 3 BR, 2 BR, 1 BR Full House, Condo, Basement & Business Units
647-861-8240

HOUSE FOR SALE
ODESSA
3 Bedrooms semi detached family house for sale. Good investment opportunity.
தொடர்புகளுக்கு: **416.556.4881**

LAND FOR SALE
COIMBATORE TAMIL NADU – INDIA
Available in the residential area. If interested
Please Contact : **416.456.8084**
In india: **+91.77.0820.0485**

போக்குவரத்துச் சேவை
Stouffville, Markham பகுதியில் கடைகள், வைத்தியசாலை, கோயில் போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு, போக்குவரத்து வசதி தேவைப்படுவோர் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: **647.643.9945**

BASEMENT & ROOM FOR RENT
MARKHAM & STEELES
2 Bedrooms bsmt for rent. Family preferred. Avail. Sep. 01, 2024.
YONGE & STOUFFVILLE
1 Room for rent. Close to YRT. Female only. Avail. Aug. 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.457.8986**

APARTMENT FOR RENT
BRIMLEY & EGLINTON
1 Bedroom, 1 Bathroom Apt. Included: Heat, AC, Water, Internet, Laundry & parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**647.980.5562**

HOLIDAY BANGALOW
KOTAHENA–COLOMBO–13 SRILANKA
With all facilities - fully furnished 3 BR - 8 guests
More Details:
Contact: **437.224.2040**

JOB VACANCY
Looking for **Coffee Cart/ Food Cart operator** pick up cart selling coffee in Toronto tourist attraction (Urgent Job opportunity)
Full time (Monday to Friday)
Location – DOWNTOWN
please contact. **416.551.8403**

HOUSE & BASEMENT FOR RENT
SCAR. GOLF CLUB & LAWRENCE
3 Bedrooms & 1.5 Washroom bangalow house for rent. Also 2 bedrooms & 1 full washroom bsmt for rent. Sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.858.9625**

CONDO. FOR RENT
MIDDLEFIELD & FINCH
2 Bedrooms + Den Condo. for rent. 2 Washrooms & 1 underground parking. Close to GTA mall. Avail. immediately.
416.617.5392/ 647.973.2690

JOB VACANCY
IT SPECIALIST
We have a IT Specilist opportunity for parttime. Female preferred.
Location – Warden & Finch
If you're interested,
please contact. **416.670.6542**

பண்ணிசை/ தமிழ் வகுப்புகள்
கோடை கால விடுமுறையில் உங்கள் பிள்ளைகளுக்கு எமது பாரம்பரிய மொழி (**தமிழ்**) மற்றும் **பண்ணிசை** அறிவை ஊட்டுவதற்கு அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: **416.560.1812**

HOUSE & BASEMENT FOR RENT
NEILSON & MCLEVIN
3 Bedrooms house for rent. Also 2 bedrooms bsmt for rent. Walking distance to school, bus stop & mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.333.5606**

HOUSE FOR RENT
HARWOOD & BAYLY
3 Bedrooms detached bungalow house main floor for rent. New kitchen, new washroom & Parking. Close to HWY 401, Go station & Ajax down town. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.605.6024**

JOB VACANCY
அகதிக் கோரிக்கை(**Refugee Claimant**) விண்ணப்பங்கள் பூர்த்தி செய்வதற்கு **அனுபவமுள்ள** ஆட்கள் தேவை.
Location – SCARBOROUGH
please contact. **416.318.8859**

மணமகள் தேவை
1984ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை. Visit visaவில் வந்தோரும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: **437.872.1499**

HOUSE/BASEMENT FOR RENT
MARKHAM & DENISON
4 Bedrooms house for rent.
STAINES & MORNINGSIDE
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
Contact: 647.686.8590

HOUSE & BASEMENT FOR RENT
BIRCHMOUNT & ST.CLAIR
3 Bedrooms in the main floor & 1 Bedroom in the bsmt. Sep. entrance, 3 parking. Close to School, Temple, Supermarket & Warden Subway. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.268.8855**

மணமகன் தேவை
1991ஆம் ஆண்டு பிறந்த இலங்கையில் வாழும் இந்து வேளாளர் குல கணவனை இழந்த பெண்ணிற்கு கனடாவில் வாழும் விவாகரத்தான அல்லது மனைவியை இழந்த மணமகனைத் தேடுகின்றோம்.
தொடர்புகளுக்கு: **647.460.4502**

மணமகள் தேவை
1988ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்த, பிரபல நிறுவனமொன்றில் பணியாற்றிய தற்போது Visitor visaவில் கனடாவில் தங்கியுள்ள இந்துவேளாளர் குல மணமகனுக்கு கனடாவில் visa உள்ள மணமகளைத் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: **647.535.5062**

HOUSE & BASEMENT FOR RENT
MARKHAM & LAWRENCE – 3 Bedrooms bungalow house for rent. 1 washroom, laundry, kitchen & 2 car parking (Garage & **driveway)** Close to all the facilities. Avail. immediately.
BELLAMY & ELLESMERE - 2 Bedrooms bsmt for rent.
தொடர்புகளுக்கு: **647.712.5223 / 416.438.3724**

HOUSE & BASEMENT FOR RENT
1. SCARBOROUGH – 3 Bedrooms & 1 washroom upper house & 2 Bedrooms & 1 washroom bsmt for rent.
2. AJAX – 4 Bedrooms full house for rent.
3. PICKERING – 4 Bedrooms & 3 washrooms house & 2 Bedrooms & 1 washroom bsmt for rent. Sep. laundry.
தொடர்புகளுக்கு: **647.282.5782**

ROOM FOR RENT
MORNINGSIDE & SEWELLES
Multiple bedrooms available with bathroom & kitchen.
தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும்.
Close to TTC (2 Buses). Contact owner about renting price.
தொடர்புகளுக்கு: **416.908.9494**

JOB JOB JOB
Line cook and Prep cook needed (full time) with experience for a busy restaurant – OakSide Bar & Lounge in Markham, Stouffville. Immediate positions available.
Line cook & Prep cook போன்ற வேலைகளுக்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கலாம்.
Good Pay & Benefits available
தொடர்புகளுக்கு: **647.406.2405**

HOME RENOVATION

- Home Painting
- Kitchen Counter top
- Kitchen cabinet
- Laminate
- Tile work
- Washroom Vanity
- Hardwood Flooring

உங்கள் நிர்மாண வேலைகள் எதுவாயினும் குறித்த நேரத்தில்
அழையுங்கள் : Krish – 647.642.7646

L&A
ACCOUNTING & TAX SERVICE
LETECIYA ANTON
416.509.4599
leteciya.accounting@yahoo.ca
Tax Planing & Preparation Bookkeeping
Payroll Service Including CRA Inquiry Prepare T4 slip
Mortgage Assistant Mortgage Financing

விதைத்துவிட்டாலே அது செடியாகி வளர்ந்து
பூத்து கனி கொடுத்து விடாது;
அதற்கான பராமரிப்பு வேலைகளை
தினமும் செய்யவேண்டும்.
அதுபோலத்தான் நமது இலட்சியங்களும்;
அன்றாடம் செய்யவேண்டிய முயற்சிகளை
செய்தால் தான் வெற்றியடைய முடியும்.

APARTMENT FOR RENT

Keels St. & 401 / Sheppard
Kennedy & Eglinton
Book Now for view
More Information
647-296-0596
www.ParaCity.ca
HOMELIFE

Para Tisikulasingam
Realtor
HomeLife/GTA Realty Inc Brokerage
Tisi Para Listings

369 CONSULTING SERVICES

WE MAKE YOUR EXPRESS REFUGEE CLAIMING

துரித கதியில் அகதி அந்தஸ்து விண்ணப்பித்தல்

CALL RAJ
416-318-8859

WHAT WE OFFER
- ✓ Visitor Visa & Student Visa Application
- ✓ Super Visa & Family Sponser (Spouse)
- ✓ Work Permit & LIMA
- ✓ Rejected Refugee Re-Application
- ✓ Visitor Visa Extension
- ✓ PR & Citizenship Application

OUR SERVICES CAN BE AVAILABLE AT REASONABLE PRICE

BEST SERVICES

BUSINESS GRANTS
Business Grants starting from $ 5,000 to 300,000

BUSINESS BDC
Business Bdc loans up to $ 350,000/=

BANK LOANS
Personal Bank loans up to $ 50,000/=

FOR MORE INFO
2855 Markham Rd, Unit 301-02, Toronto, Ontario, M1X0C3
416-318-8859, 416-388-5064
369consultingservices786@gmail.com

எமது சேவைகளை நியாயமான கட்டணத்துடன் இங்கு பெற்றுக்கொள்ளலாம்

wpm Property Management
Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

Available for Rent

Scarborough – Mccowan & Lawrence
(2Brm + 1Bath + 1 Parking), separate entry **[$2100/month]**
Brock - -Simcoe & Marad rd - Full house
4 Brm + 3 Wrm Parking) **[$2550.00/month]**
Pickering – Brock & Whitevale - Basement
(2Brm + 1Bath + 1 Parking) **[$1900/month]**
Oshawa – Harmony/ Olive – Basement
(1Brm + 1Bath + 1 parking) **[$1450.00/mnth including utilities]**
Scarborough - Mccowan & Lawrence - Full House
(2Brm + 2Bath) + 2 Kitchen **[$3,900/month]**
Scarborough – Mccowan & Lawrence– Basement
(2Brm + 1Bath) **[$2,100 / month]**

Available for Rent

Pickering – Whitevale Rd/Mulberry Lane - Detached
(4Brm + 4Bath) **[$3,400/m]**
Whitby – Country Lane & Southwell Ave Basement
(2Brm + 1Bath) **[$1600/month]**
Mississauga– Confederation / Burnhamthope -Condo
(1Brm + 1Bath) **[$20000/month]**
Oshawa – Simcoe St N/Adelaide Ave E – Bungalow
(3Brm + 2Bath) **[$2,600/month]**
Scarborough – Morningside & Ellesmere basement
(1 Brm +1Bath + 2 parking) **[$1750/month]**

BUY / SELL/ LEASE / INVEST
- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

வாசிப்புக்கு நேரம் ஒதுக்குவது சாலச்சிறந்தது

சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

மக்களின் பயன்பாட்டிலுள்ள நூல்களின் இருப்பிடம் நூலகமாகும். நூல்களை அகத்தே கொள்ளும் இடம். வாசிப்புக்கு மிகவும் ஏற்ற இடம். இது தேடலுக்கு மிகவும் பொருத்தமான இடமாகும். சுயகற்றல் சூழலை உருவாக்கும் தளமாக நூலகம் விளங்குகின்றது. இது அறிவுக் கண்களைத் திறக்கும் திறவுகோலாகும். நூலகமென்பது கல்வி அறிவையும், நற்பண்புகளையும், நல்ல சமுதாயத்தையும் உருவாக்கும் ஓர் இடமாகும். சில வாசிப்புப் பிரியர்கள் தமது வீடுகளிலும் நூலகத்தை ஆக்கியுள்ளனர். நூல்களைக் கொண்ட நூலகங்கள் காணப்படுவது அல்ல முக்கியம் அவற்றின் உச்சப் பயன்பாட்டை மக்கள் அனுபவிப்பதுதான் முக்கியம். ஆனால் இளம் சந்ததியினர் நூலகம் சென்று வாசிப்பது மிகவும் அரிகிவருகின்றது. இது எதிர்காலத்துக்கு ஒரு சாபக்கேடாகும்.

வாழ்வின் விழுமியங்களை அறிந்து ஒழுக, கற்றலில் ஆர்வம், நடத்தை, உளப்பாங்கு, நுண்மதி, அறிவாற்றல் திறன் என்பவற்றை வளர்த்து நெறிப்படுத்த வாசிப்பு அவசியமாகின்றது. அறிதல் சிறப்புற அமைய, உலகத்தைப் பற்றிய பார்வை விரிவடைய, வாழ்க்கை மேம்பட, எதிர் காலத்தில் அன்பும், அறிவும் கொண்ட சமூகம் தோற்றம்பெற, ஒருவன் தன்னைத் தானே கண்காணித்துக் கொள்ளவும், தவறுகளிலிருந்து திருத்திக் கொள்ளவும், சிந்தனைகளைச் சீர்செய்யவும், மாற்றங்களை வரவேற்பதற்கும், மாற்றங்களுக்கு எம்மை தயார் செய்து கொள்வதற்கும், நூலகங்களைப் பயன்படுத்தி வாசிப்பை வளர்த்துக்கொள்வது சிறந்ததாகும். ஆனால் இன்று பலர் நூலகத்தின் சுகங்களை அறியாது இருக்கின்றனர். அவ்வாறாயின் வாசிப்பை சுவாசிப்பது எப்படி?

பதின்மவயதினர் ஒரு பருவ மாற்றத்தின் பதட்ட நிலைக்கு உட்படுபவர்களாக உள்ளனர் என்பது உளவியலாளர் கருத்து. அறிவுத் தேடலை விட இளமை தொடர்பான உணர்வு மேலோங்கியுள்ளது. இவர்களது நடத்தைகள் பொது நியமத்திலிருந்து விலகி எதிர்பார்க்கப்படும் நடத்தைக் கோலங்களிலிருந்து முரண்படுகின்றன. பாலியல் வன்புணர்ச்சி, போதைப் பொருள் பாவனை, குழுச் சண்டை, திருட்டு, ஆட்கடத்தல், மதுப் பாவனை என இளையோர் பண்பாட்டின் எதிர் நிலைகளில் அவா கொண்டுள்ளனர். அரட்டை அடித்தல், கலாசார சீரழிவுகளில் ஈடுபடுதல், டுவிட்டரில் சண்டை போடுதல், யாரைப் பற்றியும் வம்பு பேசுதல் ஆகியவற்றுக்கு ஒதுக்கும் நேரத்தை வாசிப்புக்கு ஒதுக்குவது சாலச் சிறந்தது. வாழ்நாளில் நூலகம் சென்று வாசிப்புப் பழக்கத்தை மேற்கொள்ளாதவன் அறியாமையினால் உழல்வான். நூலகப் பயன்பாட்டை புறம்தள்ளுவது அறியாமையை எடுத்துக் காட்டுகின்றது என்பது கல்விமான்களின் கருத்தாகும்.

பொருத்தமான தகவல் வளம், பொருத்தமுடைய வாசகரைச் சென்றடைய வேண்டும் என்பது நூலக விதியாகும். புத்தகங்களைத் தொலைத்துவிட்டு அறிவைத் தேடலாமா? "நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னை சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்" என்றார் ஆப்பிரகாம் லிங்கம். "உண்மையான வாசகன், வாசிப்பதை முடிப்பதே இல்லை"

World Library Day
Monday, July 01, 2024

என்கிறார் ஆஸ்கார் வைல்ட். "உலக வரைபடத்தில் உள்ள மூலை முடுக்குகளுக்கு எல்லாம் போக விரும்புகிறாயா? "புத்தகத்தில் உலகத்தைப் படித்தால் அறிவு செழிக்கும். உலகத்தையே புத்தகமாகப் படித்தால் அனுபவம் தழைக்கும்" என்கிறார் கலைஞர். நூலகம் செல்லும் பழக்கம் என்பது அருமையான ருசி. ஒருமுறை சுவைக்கப் பழகிவிட்டால் அது தொடர்ந்து வரும். நூலகப் பாவனை தொழிற்பாடு அலட்சியப்படுத்தப்படின் சமூகத்தின் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துவிடும்.

வாசிப்புப் பழக்கத்தால் உயர்ந்தவர்கள் பலர். உயர்ந்தவர்கள் வாசிப்புப் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். "ஒரு கோடி கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது ஒரு நூலகம் கட்டுவேன்" என்றார் மகாத்மாகாந்தி. "தனித்தீவில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து விடுவேன்" என்றார் நேரு. "என் கல்லறையில் மறக்காமல் எழுதுங்கள் இங்கே ஒரு புத்தகப்புழு உறங்குவதாக" என்றார் பெட்ரண்ட்ரஸல். "மனிதனின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு எது என வினாவப்பட்டபோது சற்றும் யோசிக்காமல் புத்தகம்" எனப் பதில் அளித்தவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். "வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும்" என்றார் மண்டேலா. "பிறந்த நாளுக்கு என்ன வேண்டும் என்று கேட்டபோது புத்தகங்கள் வேண்டும்" என்று சற்றும் தயக்கமின்றிக் கூறியவர் லெனின். "ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கிக்கொடுக்கும் ஆகச்சிறந்த பரிசு புத்தகம்" என்றார் வின்ஸ்டன் சேர்ச்சில். "உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ, அதுபோல மனதுக்கு பயிற்சி புத்தகவாசிப்பு" சிக்மண்ட் பிராய்ட். "பயங்கரமான போராட்ட ஆயுதம் எது என்று கேட்டபோது புத்தகங்கள்" என்று கூறியவர் மார்ட்டின்லூதர். "ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள் அவன்தான் என் வழிகாட்டி" என்றார் ஜூலிய சீசர். "ஒவ்வொரு படமும் நடிக்க ஒப்புக்கொள்ளும்போதும் கிடைக்கும் முற்பணத்தில் முதல் நூறு டொலருக்கு புத்தகம் வாங்குபவர்" சார்லி சப்ளின். தான் தூக்கில் இடப்படுவதற்கு ஒரு நிமிடம் முன்புவரை வாசித்துக்கொண்டே இருந்தவர் பகவத்சிங். "போதும் என்று நொந்துபோய் புது வாழ்வைத் தேடுகிறீர்களா? ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத்தொடங்கு" என்றார் இங்கர்சால். "சில புத்தகங்களை சுவைப்போம், சிலவற்றை அப்படியே விழுங்குவோம், சில புத்தகங்களை மென்று ஜீரணிப்போம்" என்றார் பிரான்சிஸ் பேகன்.

நூல்கள் எங்கள் ஆசான்கள். இளமையில் கையாளும் வாசிப்புப் பழக்கமே கல்வியின் அடித்தளமாகும். ஆரோக்கியமான சமுதாயத்துக்கு பொருத்தமான ஆளுமை விருத்திக்கான அறிவுசார் நூல்களை வாசிக்கவேண்டும். நூல்கள் வெளியிடப்படுவதும், அவை வாசிக்கப்படுவதும், அபிப்பிராயங்கள் பகிரப்படுவதும், புதிய கருத்துக்கள் அதன் வழியாகத் தோற்றம் பெறுவதும், அறிவுசார் செயற்பாடுகள் இடம்பெறுவதும் ஆரோக்கியமான சமூகத்தின் அடையாளங்களாகும். மாணவர்களின் கல்வி விருத்திக்கு வாசிப்பின் பங்களிப்பு முக்கிய இடத்தை வகிக்கிறது. வாசிப்புமூலம் சொல் அறிவும், கல்வியும் விருத்தியடைந்துகொண்டே செல்கிறது. வாசிப்பும், திறனும் கற்றலின் ஒரு பகுதியே.

வாசிப்புப் பழக்கத்தைக் கைக்கொண்டால் அவர்கள் எல்லையற்ற அறிவுக் கடலில் நீந்துவர். வாழ்வியலில் வாசிப்புப் பழக்கத்தை தள்ளிப்போடாதீர். நீச்சலும் தள்ளிப்போகும். அதற்கு இடம் கொடுக்காதீர். வீட்டுக்கு ஒரு நூலகம், வீதிக்கு ஒரு நூலகம் என்பது அண்ணா, புரட்சிக்கவி ஆகியோரின் எண்ணங்களாகும். மாற்றங்களை வரவேற்பதற்கும், மாற்றங்களுக்கு எம்மை தயார் செய்துகொள்வதற்கும் வாசிப்பு முக்கியம். இதன்மூலம் பல்துறைசார் அறிவுத் திறன்மிக்க சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும். அனுபவப் பேறுகளின் நுழைவாயில்களாக அமையத்தக நூல்களால் எமது வாழ்க்கைப் போக்கில் மாறுதல்களும், திருத்தங்களும் ஏற்படும். இன்றும் பலர் வாசிப்பின் சுகங்களை அறியாது இருக்கின்றனர்.

உன் வாழ்க்கையின் ஒரு பகுதியாக வாசிப்பையும் எடுத்துச்செல். அது உயர்ந்த விழுமியங்களையும், சிறந்த நியமங்களையும் விருத்தி செய்ய உதவும். அது உன்னை உயரத்துக்கு அழைத்துச் செல்லும். எனவே வாசிப்புக்கு என நேரத்தை ஒதுக்கி வாசிப்புப் பழக்கத்தை வளர்த்து ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி முன்னேறவேண்டும். வாசிப்பால் உயர்ந்தவர்கள் பலர். அது ஓர் அறிவுச் சுடர். அந்த ஒளியில் நீயும் நனையத் தயங்காதே.

இயற்கையைப் பாதுகாப்போம்!

மரங்களும் மலையும் காடும்
மக்களால் அழிவ தாலே
வரந்தரும் இயற்கை வாடி
வறட்சியால் வதங்கக் கண்டோம்!

வனங்களில் வசிக்கும் யானை
வரிப்புலி இரையைத் தேடி
மனிதர் ஊருள் / வாழும்
வந்திடர் விளைக்கக் கண்டோம்!

கழனிகள் மறைந்து மாடிக்
கட்டடம் நிறைந்த தாலே
உழுதொழில் குறைந்து பல்லோர்
ஊர்மாறிப் போகக் கண்டோம்!

தொழில்வளம் பெருகி ஆலை
தொடர்ந்துமே வெளியில் போக்கும்
கழிவுநீர் குடிநீ ரோடு
கலந்துநோய் பரவக் கண்டோம்!

வாகன வசதி நாளும்
வளர்ந்தோங்கிக் கரி புகையால்
ஆகாயம் காற்று மாசு
அடைந்தோசோன் கிழியக் கண்டோம்!

உருவான ஓசோன் படல
ஓட்டையின் வழியாய்ப் பாயும்
புறஊதாக் கதிர்க ளாலே
புவிவெப்பம் உயரக் கண்டோம்!

நெகிழ்ப்பை மழையின் நீரே
நிலத்தினுள் புகாது மூடி
அகிலத்தைக் குப்பை மேடாய்
ஆக்கிடும் கொடுமை கண்டோம்!

கியூபிசக் கோட்பாட்டை முன்வைத்து ‘என்ன சொல்லப் போகிறாய்?’

சுலோச்சனா அருண்

நவீன தொழில்நுட்ப உதவியுடன் ஏற்படுத்தப்பட்ட நிகழ்வுதான் ‘சூம்’ என்று சொல்லப்படுகின்ற மெய்நிகர் நிகழ்வாகும். பல்வேறு நாடுகளில் இருந்தும், பலரும் பங்குபற்றக்கூடியதாகவும் இது அமைக்கப் பட்டிருக்கின்றது. சென்ற சனிக்கிழமை யூன் 15, 2024ஆம் ஆண்டு இலக்கிய வெளிக் குழுவினர் சர்வதேச ரீதியாக இலக்கியம் சார்ந்து நடத்திய மெய் நிகர் நிகழ்வு ஒன்று இடம் பெற்றிருந்தது. கோவிட் காரணமாக வெளிவராத நூல்கள் பற்றிய திறனாய்வுகளும், கருத்துப் பரிமாற்றங்களும் கனடிய தமிழ் இலக்கியத்தின் துரித வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, இந்த நிகழ்வு ஏற்பாடாகியிருந்தது.

இந்த நிகழ்வில் எழுத்தாளர் குரு அரவிந்தனின் படைப்புகள் என்ற தலைப்பில் பலர் உரையாற்றினர். முதலில் அறிமுக உரை நிகழ்த்திய இலக்கிய வெளி அகில் சாம்பசிவம் அவர்கள், சர்வதேசப் புகழ்பெற்ற, ஈழத்தமிழ் எழுத்தாளர்களில் அதிக வாசகர்களைக் கொண்ட எழுத்தாளர்களில் ஒருவரான குரு அரவிந்தன் ரொறொன்ரோவில் கணக்காளராகவும், ஆசிரியராகவும் பணியாற்றுகின்றார். கனடிய தமிழ் சிறுவர் இலக்கியத்தின் முன்னோடியான இவர், கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கம், பீல்பிரதேச குடும்ப ஒன்றியம் போன்றவற்றில் முக்கியமான பதவி வகிக்கின்றார். இதைவிட கனடாவில் இருந்து வெளிவரும் ‘தமிழாரம்’, ‘வதனம்’ போன்ற இதழ்களின் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது’ என்று குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய கலாநிதி மைதிலி தயாநிதி அவர்கள் குரு அரவிந்தனின் தற்போது வெளிவந்த சிறுகதைத் தொகுப்புகளான, இனிய நந்தவன வெளியீடுகளான ‘சாக்லட் பெண்ணும் பண்ணை வீடும்’ மற்றும் ‘யாதுமாகி நின்றவள்’ ஆகிய நூல்களோடு தொடர்பு படுத்தித் தனது உரையை நிகழ்த்தினார்.

தொடர்ந்து உரையாற்றிய வைத்திய கலாநிதி மேரி கியூரி போல் அவர்கள் மணிமேகலைப் பிரசுர வெளியீடுகளான ‘இதுதான் பாசம் என்பதா?’, ‘நின்னையே நிழல் என்று’ ஆகிய நூல்களைத் தொடர்புபடுத்தித் தனது உரையை நிகழ்த்தினார். 25 வருடங்களுக்கு முன் எப்படி எங்கள் சமூகக் கட்டமைப்பு இருந்தது என்பதை, அனுராதா ரமணன் அணிந்துரை எழுதியுள்ள குரு

அரவிந்தனின் கதைகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன என்பதையும், தமிழகத்து பிரபல இதழ்களில் இந்தக் கதைகள் வெளிவந்திருப்பதையும் குறிப்பிட்டார். ஈழப்போராட்டம் சார்ந்த கதைகளை முதன் முதலாகத் தமிழக இதழ்களில் குரு அரவிந்தன் வெளிக்கொண்டு வந்து தமிழக வாசகர்களுக்கு அறியத்தந்ததையும் எழுத்தாளர் வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) அதைப்பற்றிக் குறிப்பிட்டிருந்த தையும் எடுத்துக் காட்டினார்.

அடுத்து உரையாற்றிய கலாநிதி சு. குணேஸ்வரன் அவர்கள் ‘உறங்குமோ காதல் நெஞ்சம்’, ‘உன்னருகே நானிருந்தால்’ ஆகிய நாவல்களைத் தொடர்புபடுத்தித் தனது உரையைத் தொடர்ந்தார். குரு அரவிந்தன் யாழ்ப்பாணத் தமிழில் ஏன் எழுதுவ தில்லை என்ற தனது ஆதங்கத்தையும் அப்போது வெளிப்படுத்தினார்.

அடுத்து திறனாய்வாளர் சி. ரமேஸ் அவர்கள் ஞானம் இதழின் அட்டைப்பட நாயகனான குரு அரவிந்தனை ‘ஆச்சரியம் தரும் எழுத்தாளராகக்’ குறிப் பிட்டிருப்பதை எடுத்துக்காட்டி, குரு அரவிந்தனின் ஆறு நாவல்களை ஒப்பிட்டுத் தனது உரையைத் தொடர்ந் தார். ‘என்ன சொல்லப் போகிறாய்’ என்ற நாவலைப் பற்றிக் குறிப்பிடும்போது,



கியூபிசக் கோட்பாட்டைப் (Cubsim) பின்பற்றி எழுதிய முதல் ஈழத்து எழுத் தாளர் குரு அரவிந்தன்தான் என்பதில் சந்தேகமில்லை. ஏனைய நாவல்களில் இருந்து இதன் படைப்பு முறைகள் மற்றும் சாராம்சத்தில் வேறுபடுத்தப்பட்டு, உளவியல் தரவுகளைக் கொண்டு, பல முன்னோக்குகளை ஆதாரமாகப் பயன்படுத்தி எழுதப்பட்டிருக்கின்றது. எழுத்தாளர் அ.முத்துலிங்கத்திற்குப் பிறகு வந்த எழுத்தாளர்களில் அதிகம் அறியப்பட்ட, பரந்துபட்ட வாசகர்களைக் கொண்ட எழுத்தாளராகக் குரு அரவிந்தன் இப்போது இருப்பது எங்களைப் பெருமைப்பட வைக்கிறது. முத்துலிங்கம் அவர்கள் ஓரிடத்தில் ‘குரு அரவிந்தனின் நாவல்களை வாசிக்கும்போது ‘ஐஸ்கிறீம் குடிப்பது போன்ற சுவை இன்பத்தையும், முடிந்து விடுமோ என்ற ஏக்கத்தையும் அனுபவிக்க முடிகிறது’ என்று குறிப்பிட்டிருந்தார். குரு அரவிந்தனின் எல்லா நாவல்களையும் குணேஸ்வரன் வாசிக்கவில்லை என்றுதான் நினைக்கின்றேன், வாசித் திருந்தால் அவருடைய நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்பதையும் சுட்டிக் காட்டினார்.

அடுத்து தமிழகப் பேராசிரியர் முனைவர் கரு முத்தையா அவர்கள் உரையாற்றி னார். ‘எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய பொதுத் தமிழில் எழுதியபடியால்தான் இன்று குரு அரவிந்தன் பலரையும் கவர்ந்த சர்வதேச எழுத்தாளராக, தமிழகத்தின் அத்தனை பிரபல இதழ்களிலும் எழுதுவதால் மூன்று கோடிக்கும் மேற்பட்ட வாசகர்களைத் தனதாக்கிக் கொண்டிருக்கின்றார். சங்க இலக்கியப் புலமை மட்டுமல்ல, அறிவியல் சார்ந்த புனைவுகளையும் வெளிக்கொண்டு வந்திருக்கும் ஒரு எழுத்தாளனின் பெரிய பலமே அவனது வாசகர் வட்டம்தான், இதைத்தவிர வேறு என்ன வேண்டும்.’ என்று குறிப்பிட்டார்.

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

Head Office:
Toronto
1345 Morningside Avenue
Unit 6
Toronto, Ontario M1B 5K3

Tel 416 240 0078
Fax 416 240 1801

உடனடி வெளியீடு

எதிர்கால திட்டத்தை வரையறுக்க CTC வியூக அமர்வு ஒன்றை நிகழ்த்தியிருந்தது.

டொராண்டோ, ஜூன் 17, 2024 அன்று– கனேடிய தமிழர் பேரவை (CTC) அதன் உறுப்பினர்கள், இயக்குநர்கள் குழு மற்றும் ஆலோசகர்களை ஒன்றிணைத்து ஒரு முழு நாள் அமர்வை சனிக்கிழமை அன்று நடத்தியிருந்தது. கனடிய தமிழர் பேரவையின் அடுத்த ஐந்து ஆண்டுகள் தொடர்பான திட்டமிடலை மேற்கொள்வதற்கான வியூகங்களை உருவாக்கும் ஒரு அமர்வாக இது அமைந்திருந்தது.

இந்த அமர்வு அர்ப்பணிப்புள்ள சமூக உறுப்பினர்களால் மிகவும் விரிவான முறையில் தொகுக்கப்பட்டிருந்ததோடு பலம், பலவீனங்கள், வாய்ப்புகள், அச்சுறுத்தல்கள் என்பவை குறித்தும் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இந்த கலந்துரையாடல்கள் கனடா மற்றும் இலங்கையில் CTC இன் பங்கை அடையாளம் கண்டு முன்னுரிமை அளிப்பதோடு பரந்த கனேடிய தமிழ் சமூகத்துடன் இணைந்து செயற்படுவதற்கான பயனுள்ள வழிகளையும் ஆராய்வதில் கவனம் செலுத்தியிருந்தது.

இந்த அமர்வின் முக்கிய விவாத புள்ளிகள்:

- கனடா மற்றும் இலங்கை ஆகிய இரண்டிலும் CTC இன் பரிணாமப் பங்கு
- கனடிய தமிழ் சமூகத்துடன் பரந்த ஈடுபாட்டிற்கான உத்திகள்
- அமைப்பு மற்றும் சமூகம் எதிர்கொள்ளும் சவால்கள்

இந்த அமர்வைத் தொடர்ந்து, கனேடிய தமிழ் சமூகத்தின் வளர்ச்சியடைந்து வரும் தேவைகளை நன்கு புரிந்து கொள்வதற்காக CTC ஒரு விரிவான பொது அறிவுரை கோரலை நடத்தவுள்ளது. இந்த ஆலோசனை செயல்முறையானது தமிழ் சமூகத்தின் பலதரப்பட்ட எண்ணங்களையும் தேவைகளையும் CTC இன் செயற்திட்டங்களில் திறம்பட பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உறுதி செய்யும்.

கனேடிய தமிழ் சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒருங்கிணைந்ததும் உள்ளடக்கியதுமான சூழலை வளர்ப்பதற்கு CTC உறுதிபூண்டுள்ளது. இந்த அமர்வின் போது கிடைக்கப்பெற்ற பரிந்துரைகள் CTC க்கு அதன் தாக்கத்தை வலுப்படுத்தவும், அதன் செயல்பாடுகள் சமூகத்தின் தேவைகளுடனும் அபிலாஷைகளுடனும் ஒத்துப்போவதை உறுதி செய்யவும் உதவும்.

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
416-240-0078 /
info@canadiantamilcongress.ca

கனேடிய தமிழர் பேரவை பற்றி:
கனடிய தமிழர் பேரவை (CTC) என்பது கனடாவில் உள்ள தமிழ் சமூகத்திற்காக குரல் கொடுக்கும் ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும். CTC கனடாவில் தமிழர்களின் கலாச்சார, சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும், பரந்த கனேடிய சமூகத்துடன் வலுவான உறவுகளை வளர்ப்பதற்கும், உலகளவில் தமிழர்களைப் பாதிக்கும் மனித உரிமைகள் பிரச்சினைகளுக்காக குரல் கொடுப்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

Chapters: • Montreal • Ottawa • Vancouver • Edmonton • Winnipeg • Halifax • Waterloo


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 . 724 . 7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

LOVER – திரைவிமர்சனம்

ஆரணி ஞானநாயகன்

காதலனோ, கணவனோ ஒருவர் கதாநாயகியை அடக்கி, தனது விருப்பத்திற்கு ஏற்ப வற்புறுத்தி வாழ்வதைக் காட்டும் பல படங்கள் வந்துள்ளன. இப்படங்களில் சில அவரைக் கதாநாயகனாகவும், பல அவரை வில்லனாகவும் காட்டுகின்றன. பொதுவாக கதாநாயகன் இவ்வாறு அமையும்போது அவர் திருந்தி மனம் மாறுவதாகக் காட்டப்படும்.

இந்த வரிசையில் Lover படம் 2024ஆம் ஆண்டில் வெளியானது. இதில் அருண் (மணிகண்டன்) மற்றும் திவ்யா (ஸ்ரீகௌரி பிரியா) பல்கலைக்கழகக் காலத்தில் இருந்து ஆறு வருடங்களாகக் காதலித்து வருகின்றனர். திவ்யா எங்கு சென்றாலும் அருண் அதைப் பற்றிக் கேட்டு, அவளைத் தடுக்க முயல்வதால் ஒருமுறை திவ்யா அருணிடம் பொய் சொல்லிவிட்டு அவருடன் வேலை பார்ப்பவர்களுடன் வெளியே செல்கிறாள்.

இந்தப் பொய்பற்றி அறியும் அருண் கோபமடைந்து திவ்யாவுடன் பேச்சுமூலம் சண்டை போடுகிறார். இதனால் திவ்யா அவரை விட்டு விலகுகிறார். இதை ஏற்க முடியாத அருண், திவ்யா எப்படி என்றாலும் தன்னைத் திருப்பி ஏற்க வேண்டும் என விரும்புகிறார். திவ்யாவும் அவரை ஏற்கத் தயாராக இருக்கும்போது மீண்டும் இருவரும் சண்டை பிடிக்கின்றனர்.

திவ்யா அருணைவிட்டு நிரந்தரமாக விலகுவாரா? அருண் இதை ஏற்பாரா? இல்லாவிட்டால் இருவரும் திருமணம் செய்து கொள்வார்களா? என இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.

பொதுவாக இத்தகைய படங்களில் கதாநாயகி வில்லத்தனமானவரிடம் இருந்து தப்புவார், இல்லாவிட்டால் மனம்மாறிய கதாநாயகனுடன் வாழ்வார். ஆனால், இப்படத்தில் அருணின் செயல்களை மிகைப்படுத்தி, அவரை வில்லனாக்காமல் சாதாரண கதாபாத்திரமாகக் காட்டப்படுகிறது. அவர் திவ்யாவை அடிக்காவிட்டாலும் அவளை மதிக்கவில்லை. திவ்யாவோ வேலை செய்துகொண்டு, நண்பியுடன் வாழ்ந்து வருகிறார். அவர் திருமணம் செய்யாமல், காதலனுடன்

பழகி, மதுவைக் குடித்து வாழ்ந்தாலும் ஒரு ஆணின் கட்டுப்பாட்டினுள் நடப்பவராகக் காட்டப்படுகிறது.

எனவே நகரப்புற வாழ்விலும், தற்கால மேற்கத்தைய பழக்கத்தைப் பின்பற்றுபவர்களிடமும் இத்தகைய உறவுப் பிரச்சினைகள் வருகின்றன என இப்படம் உணர்த்துகிறது. அவை அடிதடி, வன்முறை அற்றதாக இருந்தாலும் மிகக் கடினமான பாதிப்பை அவர்களுக்குக் கொடுக்கலாம் எனவும் இப்படம் காட்டுகிறது.

படத்தில் வரும் மது, புகைத்தல், பேச்சு, நடவடிக்கை போன்றவை சில பார்வையாளர்களுக்குச் சங்கடமாக இருக்கலாம். ஆனால், அவை இந்திய நகர்களிலும், மேற்கத்தைய நாடுகளிலும் வாழும் தமிழ் இளைஞர் சிலரின் வாழ்க்கை முறையுடன் பல ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன. இதற்கு ஏற்ப படத்தில் இருந்து தேவையான கருத்துகளை எடுக்கலாம், எடுக்க வேண்டும்.

கனடிய அரசாங்க ஆய்வு ஒன்றில், 2018இல் கனடாவைப் பிறப்பிடமாகக் கொண்ட வெள்ளை, ஐரோப்பிய மற்றும் முதற்குடிமக்கள் அல்லாத இனங்களில் இருக்கும் பெண்களில் (ஆசியர், ஆபிரிக்க இனங்கள் உட்பட்டோர்) உறவு முறையில் உள்ள பெண்களில் கிட்டத்தட்ட அரைவாசிப்பேர் தமது துணைவரிடம் சொல் அல்லது செயல் மூலமாக வன்முறையை அனுபவித்துள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, சொல் மூலமான வன்முறையையும், அதன்மூலம் வரும் மனத்தாக்கமும், அதிலிருந்து விடுபடும் முறையையும் இப்படம் காட்ட முயல்கிறது. இதை அனைவரும் பார்க்கலாம்.

மத்திய .....

05 ஆம் பக்கத்தொடர்ச்சி

யளவில் வெளியானபோது பழமைவாதக் கட்சியைச் சேர்ந்த டொன் ஸ்ருவட் 590 வாக்குகளால் லிபரல் கட்சியைச் சேர்ந்த லெஸ்லி சேர்ச்சை தோற்கடித்து வெற்றிபெற்றார்.

இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானோர் 84,934பேர். இதில் 36,962பேர் (43.52%), இவ்விடைத்தேர்தலில் வாக்களித்திருந்தனர். இத்தொகுதியின் சனத்தொகை 116,953 ஆகும். இத்தேர்தலில் போட்டியிட்ட ஒரு சுயேட்சை வேட்பாளருக்கு ஒரு வாக்குக்கூடக் கிடைக்கவில்லை. 31 சுயேட்சை வேட்பாளர்களும், கட்சி வேட்பாளர்களும் தனித்தனியே 100இலும் குறைவான ஆனால், 10க்கும் மேற்பட்ட வாக்குகள் கிடைத்தன. 48 சுயேட்சை வேட்பாளர்களுக்கும், கட்சி வேட்பாளர்களுக்கும் தனித்தனியே 10இலும் குறைவான வாக்குகள் கிடைத்தன.

2021இல் நடைபெற்ற கனடாவின் 44ஆவது நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் ரொறொன்ரோ-செயின்ட்.போல் தொகுதியில் லிபரல் கட்சி 49.22% வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தது. பழமைவாதக்கட்சி 25.30% வாக்குகளையும், புதிய ஜனநாயகக்கட்சி 16.83% வாக்குகளையும் பெற்றிருந்தது. அப்போது 65.48%ஆனோர் வாக்களித்திருந்தனர்.

இம்முறை நடைபெற்ற இடைத்தேர்தலில் லிபரல் கட்சி 8.73% வாக்குகளை இழந்துள்ளது. புதிய ஜனநாயகக் கட்சி 5.89% வாக்குகளை இழந்துள்ளது. அதே நேரம் பழமைவாதக்கட்சி 16.78% அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுள்ளது.

ரொறொன்ரோ-செயின்ட். போல் இடைத்தேர்தல் முடிவு

வேட்பாளர் பெயர்	கட்சி	வாக்குகள்	வீதம்
Don Stewart	பழமை வாதக் கட்சி	15,555	42.1%
Lesslie Church	லிபரல் கட்சி	14,965	40.5%
Amrit Parhar	புதிய ஜன நாயகக் கட்சி	4,044	10.9%
Christian Cullis	பசுமைக் கட்சி	1,059	2.9%
Dennis Wilson	மக்கள் கட்சி	234	0.6%

இந்த இடைத்தேர்தல் முடிவுகள் கனடாவில் தற்போது வெளியாகும் கருத்துக்கணிப்புகளை ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நீண்ட வாக்குப்பதிவுக் குழுவினர் சார்பில் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில், தற்போதைய FPTP வாக்களிப்பு முறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு மொத்தமாக 1,048 வாக்குகள் விழுந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வன்கூவரில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் யூன் 25ஆம் திகதி உரையாற்றிய லிபரல் கட்சியின் தலைவரும், கனடியப் பிரதமருமான ஜஸ்ரின் ரூடோ ரொறொன்ரோ-செயின்ட்.போல் தொகுதியில் வெற்றியீட்டிய பழமைவாதக் கட்சியின் டொன் ஸ்ருவர்ட்இற்கு கடுமையாக நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றதற்காக வாழ்த்துத் தெரிவித்தார். அவரது லிபரல் கட்சி வேட்பாளரான லெஸ்லி சேர்ச்இற்கு வலுவான, நேர்மறையான தேர்தல் பிரச்சாரத்தை நடத்தியதற்காகப் பாராட்டுத் தெரிவித்தார்.

Leslie Church and Justin Trudeau

அவர் மேலும் தெரிவிக்கையில், “இது நிச்சயமாக நாங்கள் விரும்பிய முடிவு அல்ல, ஆனால், மக்களின் கவலைகள் மற்றும் விரக்திகளை நான் கேட்கிறேன் என்பதைத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். தற்போது நாங்கள் இருப்பது எளிதான காலங்களில் அல்ல (Not easy times), உறுதியான உண்மையான முன்னேற்றத்தை வழங்க நானும் எனது முழு லிபரல் கட்சி உறுப்பினர்களும் தயாராக இருக்கிறோம். நாங்கள் இன்னும் நிறைய வேலைகள் செய்ய வேண்டும் எனத் தெளிவாகத் தெரிகிறது. இந்தக் கடினமான காலங்களில் நாடு முழுவதும் உள்ள கனடியர்களுக்கு என்ன தேவை என்பதை உறுதிப்படுத்த வேலை செய்வதையும் போராடுவதையும் நாங்கள் ஒருபோதும் நிறுத்தமாட்டோம். எனது கவனம் உங்கள் வெற்றியில் உள்ளது. அது அங்கேயே இருக்கும்” என்றார்.

தனது கட்சியின் இடைத்தேர்தல் வெற்றியைக் கொண்டாடிய பழமைவாதக் கட்சித் தலைவர் தனது சமூகவலைத் தளமான Xஇன் பதிவில், “இதோ மக்கள் தீர்ப்பு! ரூடோ இவ்வாறு இனித் தொடர முடியாது. அவர் உடனடியாக ‘கார்பன் வரியை’ முன்வைத்து நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும்” எனக் கூறியுள்ளார்.

லிபரல் கட்சியின் சிறுபான்மை அரசை ஆதரித்துவரும் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங் ஊடகங்களுக்கு இடைத்தேர்தல் முடிவு பற்றி தனது கருத்தைத் தெரிவிக்கையில், “இடைத்தேர்தல் முடிவுகள் மக்கள் விரக்தியில் இருப்பதைக் காட்டுகிறது. லிபரல் அரசின் மீது மக்கள் மிகவும் கோபத்தில் உள்ளனர். மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர். அது எந்த மாற்றம் என்பதுதான் மக்கள் இப்போது தெரிவு செய்யவேண்டும்.” என்றார். அவர் மேலும் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கையில், “தனது கட்சி, சிறுபான்மை அரசாங்கத்துடனான தனது செல்வாக்கை, தமது கட்சி முன்னுரிமைகளுக்குத் தொடர்ந்து பயன்படுத்தும்” என்றார்.

தொழில் செய்யமுடியாதளவுக்கு உடல் நிலை பாதிப்பு ஏற்பட்டால் வருமானம் பெறும் காப்புறுதித் திட்டங்கள் (Disability insurance plans)

"தொழில் செய்யமுடியாதளவுக்கு உடல் நிலை பாதிக்கப்படும் ஒருவர் எத்தகைய காப்புறுதித் திட்டங்கள் மூலம் கனடாவில் வருமானம் பெறலாம்?" என்பதே இன்று நாம் அறிந்துகொள்ளப்போகும் தலைப்பாகும்.

அதனை ஏழு வகைக்குள் உள்ளடக்கலாம்.

(1) தொழில் காப்புறுதித் திட்டத்திலிருந்து கனடிய மத்திய அரசு வழங்கும் சலுகை. (Employment Insurance Sickness Benefit)

தொழிலில் பெற்ற வருமானத்தில் 55% வீதம் வரை அதிலும் ஆகக் கூடுதலாக கிழமைக்கு $668 டாலர் மட்டுமே தொடர்ந்து 26 கிழமைகளுக்கு, தொழில் செய்யமுடியாதளவுக்கு உடல் நிலையில் பாதிப்பு ஏற்பட்டு ஒரு கிழமையின் பின்பு பெறலாம்.

ஆனால் இதனைப் பெற விண்ணப்பிப்பவர் கடந்த 52 கிழமைக்குள் சுமார் 600 மணித்தியாலத்திற்குக் குறையாது கனடாவில் தொழில் செய்திருக்க வேண்டும்.

(2) அரச ஓய்வூதியத் திட்டத்திலிருந்து உடல் இயங்கமுடியாதவருக்கு வழங்கப் படும் சலுகைகள். (CPP - Canadian pension plan disability benefits)

தொடர்ந்து தொழில் செய்து வருமானம் பெற்றுவரும் ஒருவர், 65 வயதுக்குப் பின்பு ஓய்வு பெறும் காலங்களில் வருடா வருடம் வருமானம் பெறுவதற்காக சிறு சிறு தொகையினை அரச ஓய்வூதியத் திட்டத்தில் முதலீடு செய்கின்றார்.

65 வயதினை அடைய முன்பு தொழில் செய்யமுடியாதளவுக்கு நிரந்தரமாக, அதாவது மீளமுடியாதளவுக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டால், இத்திட்டத்துக்கு மனு செய்து தொடர்ந்து வருமானச் சலுகை பெறலாம்.

$485 டொலரிலிருந்து $1335 டொலர் வரை மாதம் பெறலாம். 18 வயதுக்குட் பட்ட பிள்ளைகளுக்கு மாதம் $294 டொலர்வரை ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்குவர். படித்துக் கொண்டு இருப்பவ ராயிருந்தால் 25 வயது வரை பெறலாம்.

(3) தொழில் செய்யும் இடத்தின் பாது காப்புக் காப்புறுதித் திட்டத்திலிருந்து வழங்கும் சலுகை (Work place safety insurance benefits)

தொழில் செய்யும் இடத்தில் அல்லது செய்யும் தொழில் காரணமாக ஒருவர் பாதிப்புள்ளாகி தொடர்ந்து தொழில் செய்யமுடியாதளவுக்குரிய நிலைமை உருவாகினால், தொழிலில் கிடைத்த வருமானத்தில் 85%வீதம் வரை விண்ணப்பித்து பெறலாம்.

(4) அடமானக் காப்புறுதித் திட்டத்தி லிருந்து பெறும் உடல் இயலாமைக்கான சலுகை. (Mortgage disability insurance benefits)

வீடுகள், வியாபாரத் தளங்கள் என நிலை யான சொத்துக்களை அடமானக் கடன் கள் மூலம் வாங்குவோரில் பலர் அவர் களின் அடமானங்களைப் பாதுகாப்பதற் காக இத்தகைய காப்புறுதித் திட்டங்கள் செய்து வைத்திருக்கலாம். அவ்வாறு செய்துவைத்திருந்தால் தொடர்ந்து செலுத்தவேண்டிய அடமானக் கடன்களை இக்காப்புறுதி செலுத்திக்கொள்ளும்.

(5) குழுவான உடல் இயலாமைக்கான காப்புறுதித் திட்டம் (Group disability insurance plan)

தொழில் செய்யும் பல இடங்களில் தொழிலாளர்கள் பலரையும் ஒன்று சேர்த்து பல வகையான காப்புறுதி வகைகளை உள்ளடக்கி ஒரே இலக்கத் தில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவது வழமையாகும். அதேபோல் தொழிற் சங்கங்களில் உறுப்பினர்களை ஒன்று சேர்த்து இதே மாதிரியான குழுவான திட்டங்கள் செய்திருப்பார்கள்.

அந்த மாதிரியான திட்டங்களிலிருந்தும் குழுவில் உள்ளவர்கள் அவர்களின் உடல் நிலைமை பாதிக்கப்பட்டால் உடல் இயலாமைக்கான சலுகைகள் பெறலாம்.

(6) ஒன்ராறியோ மாகாண அரசு வழங்கும் உடல் இயலாமைக்கான ஆதரவுத் திட்டம். (ODSP - Ontario Disability Support Plan)

மாகாணத்தில் வாழும் ஒருவர் தொழில் செய்யமுடியாத அளவுக்கு உடல் நிலை பாதிப்பானால், அவ் திட்டங்களில் இருந்து சலுகை பெறலாம்.

(7) உடல் இயலாமைக்கான பிரத்தியேக மான தனியார் காப்புறுதித் திட்டம். (Individual Disability Insurance Plan)

தொழில் செய்யும் ஒருவர் தமது விருப்பப்படி நேரடியாக ஒரு காப்புறுதிக் கம்பனிக்கு பணம் செலுத்திப் பெற்று வைத்திருக்கும் திட்டமாகும்.

எழுத்தாளர்.....

11 ஆம் பக்கத்தொடர்ச்சி

சினிமாப் பாடல்களை எழுதுவதிலும் வல்லவராகக் காட்டிக்கொண்டார். 'என்னிடத்தில் உன்னைக் கொடுத்தேன்' என்னும் படத்தில் அவர் எழுதிய 'மல்லிகைப் பூவே...' என்னும் பாடலும் தென்னாலி படத்தில் வரும் 'இஞ்சாருங்கோ இஞ்சாருங்கோ...' பாடலும், 'மின்னலே' படத்தில் ஏ.ஆர். ரகுமானின் இசையமைப்பில் வந்த 'வசீகரா...' பாடலும் அவரை சினிமாத் துறையில் மிகவும் பிரபலப்படுத்தியவை. அதனைத் தொடர்ந்து தாமரை தனக்கென ஒரு தனியான இடத்தை சினிமாத் துறையில் தக்கவைத்துக்கொண்டார். 'மின்னலே' படத்தின் பின்னர் ஜெயராஜ், மேனன், கௌதம் போன்றவர்களுடன் இணைந்து பல பாடல்களைத் தந்துள் ளார். 'காக்கக்காக்க, 'வேட்டையாடு விளையாடு, பச்சைக்கிளி முத்துச்சரம், வாரணம் ஆயிரம்' போன்ற படங்களுக்குப் பாடல்களைத் தந்துள்ளார். 'சுப்பிரமணிய புரம், பசங்கள்' போன்ற படங்களுக்கும் படத்தயாரிப்பாளர்கள் பாலா, ஏ.ஆர். முருகதாஸ், வி. பிரியா, சசிகுமார் போன்றோருடன் இணைந்து பாடல்களைத் தந்துள்ளார். சினிமாப் பாடல்களைவிட அவரது கவிதைகள் மிகவும் தாக்கம் பெற்றவையாக உள்ளன.

ஏய் பல்லக்குத் தூக்கி!
கொஞ்சம் நிறுத்து...
உட்கார்ந்து உட்கார்ந்து
கால் வலிக்கிறது...

என்னும் அவரது சிறிய கவிதை அனைவரதும் கவனத்தை ஈர்த்த ஒன்று. ஆழமான சமூகப் பார்வையை அவர் கொண்டுள்ளமையை அது எடுத்துக் காட்டுகின்றது. பல்லக்கில் இருப்பவனுக்கு கால் உளைகின்றது. ஆனால் அதனைச் சுமந்துசெல்கின்றவனைப் பற்றி இந்தப் பண்ணைக்காரர்கள் - மேட்டுநில வாசிகள் சிந்திப்பதே இல்லை அவர்கள் மாடாக உழைக்கின்றனர். இவர்கள் உழைப்பின்றி ஒய்யாரமாய் வாழ்கின்றனர் என்பதனை மிகநுட்பமாக எடுத்துக் கையாண்டுள்ள திறமை அவரது புலமையின் நிறைவைப் படம் போட்டுக் காட்டுகின்றது. உட்கார்ந்து உட்கார்ந்து கால் வலிக்கின்றது. ஆனால்

நடந்து நடந்து பல்லக்கைக் காவிச் செல்பவனின் நிலை என்ன என்பதனைச் சற்றுச் சிந்தித்தானா இந்த மேட்டு நிலக் குடிகாரன் எனத் தனது விசனத்தையும் ஆத்திரத்தையும் ஒருசேர முன் வைக்கின்றார். சிந்திக்கத் தூண்டும் அற்புதக் கவிதைகள். பெண்ணியம், ஏழைகள், தொழிலாளர்கள், மீனவர்கள் என உழைக்கும் வர்க்கம் படும்பாட்டைக் கண்டு மனம் நொந்து நோக்கும் உயரிய பண்பாளர் இந்தத் தாமரை. தனது பொறியியலாளர் பதவியைத் தள்ளிவிட்டு தன்வழி தனி வழியென எழுத்துலகில் வலம் வருகின்றார். பாடல் வரிகளால் தனது பெயரை நிலைநாட்டிக்கொண்டுள்ள அற்புதமான பெண் கவிஞர் அவர். எழுதிய கவிதைகளில் பெண் எழுச்சியை வலியுறுத்தும் வன்மம் தொனிக்கின்றது.

கூவி அழை, பஞ்சாயத்தைக் கூட்டு,
கேள்விகேள், உரக்கப்பேசு,
அணைக்க வந்தால் அடித்து விரட்டு!

என பெண்ணுக்கு இழைக்கப்படும் கொடுமைக்கு நியாயம் கிடைக்கவேண்டும் அதற்கு மயிலே மயிலே இறகு போடு என்பதுபோன்று கேட்டுப் பெற முடியாது துணிந்து எதிர்கொள்ளவேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றார்.

பவானி!
நேற்று நான், இன்று நீ!
இன்னும் மெத்தனமாயிருந்தால்
இன்று நான், நாளை நீ!
நீ மட்டுமே!

காதல் மலிந்துவரும் பாடல்களோடு வெஞ் சினம் உரைக்கும் பாடல்களும் அவரது பாடல்களில் தொனிப்பொருளாக அமைந் துள்ளன. ஈழத்துத் தமிழருக்கு இழைக்கப் படும் கொடுமைகளுக்கு நியாயம் கேட்கின்றார் தாமரை.

வெறும் எழுத்தாளராக அல்லாமல் சமத்துவம், நீதி, நேர்மை என சமுதாயத்தில் எல்லாமே எல்லோருக்கும் கிடைக்கவேண்டும், அமைதியான வாழ்வு கிட்டவேண்டும் என்னும் பொதுவுடமைக் கொள்கையின்பால் தன்னை இணைத்துக் கொண்டவர் தாமரை.

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

பிரபாகரனுக்கு.....

09 ஆம் பக்கத்தொடர்ச்சி

பாதுகாப்புச் செயலர் டி.என். சேஷன் அந்தத் தாக்குதல் சம்பவத்தின் வீடியோவை என்னிடம் கொடுத்து (இந்திய அரசு தொலைக்காட்சியான) தூர்தர்ஷனிடம் கொடுக்கச் சொன்னார். அந்த வீடியோ அதன்படியே கொடுக்கப்பட்டது.

இந்திய அமைதி காக்கும் படை ஆரம்பத் திலிருந்தே ஒரு மோசமான நிகழ்வாக அமைந்தது. ஆரம்ப கட்டச் சேதங்களுக் குப் பிறகு, ராணுவம் சுதாகரித்துக்கொண் டாலும் இது பேரழிவாகவே அமைந்தது. ஆரம்பத்தில், இந்திய அமைதி காக்கும் படை விடுதலை தர வந்த படையாகக் கருதப்பட்டு, யாழ்ப்பாண மக்களால் வரவேற்கப்பட்டது. இந்திய ராணுவத்தின் பாதுகாப்போடு பிரபாகரன் யாழ்ப்பாணத் திற்குத் திரும்ப முடியும் எனக் கருதிய புலிகள் இயக்க உறுப்பினர்களும் இந்த வரவேற்பில் இணைந்து கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்தும் கிழக்குப் பகுதி யில் இருந்தும் புலிகளால் துப்பாக்கி முனையில் துரத்தப்பட்ட பிற போராளிக் குழுக்கள் தாங்களும் யாழ்ப்பாணத்திற்கும் கிழக்கிற்கும் திரும்ப முடியும் என்ற நம்பிக்கையில் இந்திய அமைதி காக்கும் படையை வரவேற்றனர்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் எல்லாப் பகுதிகளிலும் இந்திய அமைதி காக்கும் படை இறங்கிய இடங்களில் எல்லாம் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மக்களின் வரவேற்பைப் பார்க்கும்போது, அமைதி காப்பதில் தன் பலத்தைப் பயன்படுத்தியதன்மூலம், தெற்காசியாவில் ஒரு முக்கிய சக்தியாக இந்தியா ராஜதந்திர வெற்றியைப் பெற்றிருப்பதாக இந்திய வட்டாரங்களில் நம்பிக்கை ஏற்பட்டது.

ஆனால், ஒப்பந்தம் கையெழுத்தாகி 24 மணி நேரத்திற்குள் படைகள் அனுப்பப் பட்டதால், இலங்கையின் கள நிலவரம் குறித்து எவ்விதமான தகவல்களும் படைத் தளபதிகளுக்கோ வீரர்களுக்கோ அளிக்கப்படவில்லை.

அமைதிப் படை தரையிறங்கியதிலிருந்து, புலிகளுக்கும் அமைதி காக்கும் படைக்கும் இடையில் மோதல் ஏற்படும் காலத்திற்கு இடையில் சுமார் இரண்டு மாதங்கள் இருந்தன. அந்தக் காலகட்டம் இந்தியாவால் பயன்படுத்திக் கொள்ளப் படவில்லை. இதனால் இலங்கைப் போராளிகளுக்கும் இலங்கை ராணுவத் திற்கும் இடையில் அமைதி காக்கும் படையாக இருந்திருக்க வேண்டிய, இந்திய அமைதி காக்கும்படை, தமிழ்ப் போராளிகளோடு மோதவேண்டியதாயிற்று. இது "இலங்கையின் வட - கிழக்குப் பகுதியை இந்தியாவின் வியட்னாமாக மாற்றியது" என்று தெரிவித்துள்ளார் மணி சங்கர் அய்யர்.

தொடர்ந்து இந்தியத் தலைநகர் புது டில்லியில் நடைபெற்ற ராஜீவ்காந்தி - பிரபாகரன் பேச்சுவார்த்தையின்போது என்ன நடந்தது என்பதையும் இந்நூலில் விளக்கியுள்ளார், மணி சங்கர் அய்யர்.

"ஒப்பந்தம் கையெழுத்தான வாரம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் புதுடில்லிக்கு அழைத்து வரப்பட்டார். அவரிடம் ஒப்பந்தத்தின் பிரதி அளிக்கப் பட்டபோதே, பிரச்சினை ஆரம்ப அறிகுறி கள் தெரிய ஆரம்பித்தன.

அவர் டில்லி அசோகா ஹோட்டலில் பலத்த காவலுக்கு இடையில் தங்க வைக்கப்பட்டிருந்தார். அந்த ஒப்பந்தத் தைப் படித்துப் பார்த்துவிட்டு, தன் சகாக்களிடம் கருத்துக்களைக் கேட்க விரும்பினார் அவர். விரைவிலேயே அந்த ஒப்பந்தம் தனக்கு ஏற்புடையதல்ல என்பதை பிரபாகரன் தெளிவுபடுத்தினார். பிரபாகரன் தங்கியிருந்த அறைக்குள் ரகசியமாக நுழைந்த பத்திரிகையாளர் அனிதா பிரதாப்பிடம் இதனை அவர் வெளிப்படையாகவே சொன்னார். அனிதா பிரதாப் பிரச்சினை உருவாவதைப் புரிந்துகொண்டார். ஆனால், இந்திய அரச கட்டமைப்பிலிருந்த யாருக்கும் அது புரிந்திருக்கவில்லை. ராஜீவ்காந்தியின் தனிப்பட்ட வசீகரத்திற்கு பிரபாகரன் பணிந்துவிடுவார் என நம்பினார்கள். ஆனால், டில்லியிலிருந்து எப்படித் தப்புவது என்பதைத்தான் பிரபாகரன் யோசித்துக் கொண்டிருந்தார்.

பிரதமர் ராஜீவ் காந்தியுடனான சந்திப்பிற்குப் பிறகு, அவரது குடும்பத் துடனான விருந்தில் கலந்துகொள்ள பிரபாகரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. விருந்து முடிந்த பிறகு, தனது மகன் ராகுல்காந்தியை அழைத்த ராஜீவ், தனது குண்டு துளைக்காத கவச உடையை எடுத்துவரும்படி சொன்னார். அதனை பிரபாகரனுக்கு அணிவித்த ராஜீவ், "உங்களைப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று புன்னகையுடன் சொன்னார். இந்த விவகாரம் தொடர்பாக எச்சரிக்கை விடுத்த வர்களிடம் "பிரபாகரன் ஒப்புக்கொண்டார். நான் அவரை நம்புகிறேன்" என்று பதிலளித்தார் ராஜீவ்.

இந்தப் பேச்சுவார்த்தையின் பின்னர் பிரபாகரன் தனக்கு ஐந்து கோடி ரூபாய் நிதி தேவையெனத் தெரிவித்தார். அந்தப் பணம் கொடுக்கப்பட்டது. ஆனால், இறை யாண்மையுள்ள தனித் தேசமாக ஈழத்தை அடைவதிலும் பிரபாகரன் உறுதியாக இருந்தார். ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு ஒகஸ்ட் 04ஆம் திகதி சுதுமலையில் நிகழ்த்திய தனது பேச்சிலேயே ஒப்பந்தம் குறித்த முரண்பாட்டை பிரபாகரன் தெரிவி த்தார். "நாங்கள் இந்தியாவையும் அதன் மக்களையும் நேசிக்கிறோம். ஆனால், தமிழ் ஈழத்தை அடையும் லட்சியத்திற்கா கத் தொடர்ந்து போராடுவோம்" என்றார்.

விரைவிலேயே ஆயுதங்களை ஒப்படைப்ப தில் தனக்கு விருப்பமில்லை என்பதை புலிகள் இயக்கத்தினர் அறிவித்துவிட்டனர். ஆரம்பத்தில் புலிகளுக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையிலான உறவு சுமுக மாகவே இருந்தது. இந்தியப் படைகளு டன் எந்த நேரத்திலும் பேசுவதற்காக, ரேடியோ அலைவரிசையும் புலிகளுடன் பகிர்ந்துகொள்ளப்பட்டது. ஆனால், இப்படி அலைவரிசையைப் பகிர்ந்துகொண்டது பிறகு பிரச்சினையாகவே முடிந்தது.

திலீபனின் மரணம் ஒப்பந்தத்திற்கு எதிரான ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இதற்கிடையில், ஏகப்பட்ட ஆயுதங்கள், வெடிபொருட்களுடன் விடுதலைப்புலிக ளின் முக்கியமானவர்களின் ஒருவரான புலேந்திரன் உட்பட, 16 புலிகள் இயக்கத்தினர் பாக்நீரிணை பகுதியில் கைது செய்யப்பட்டனர். அவர்களைப் பார்க்கவும் உணவு அளிக்கவும் புலிகள் அனுமதிக்கப்பட்டனர். உணவு அளிக்கும் சாக்கில் அவர்களுக்கு சயனைட் அளிக்கப்பட்டது. அதனை அருந்தி 17 பேரும் உயிரிழந்தனர்.

அவர்களது சடலங்கள் பிரபாகரனின் சொந்த ஊரான வல்வெட்டித்துறைக்கு கொண்டுவரப்பட்டபோது பொது மக்களின் கோபம் உச்சக்கட்டத்தை எட்டியது. புலிகள் தாக்குதல் நடத்த ஆரம்பித்தனர். மோதலைத் தவிர்ப்பதற்காக பிரபாகரனைச் சந்திக்க இந்தியத் தளபதிகள் முயன்றனர். ஆனால், அது நடக்கவில்லை. விரைவி லேயே இந்திய ரோந்து வாகனத்தைத் தாக்கிய புலிகள், ஐந்து கமாண்டோக் களைக் கொன்றனர். இரு தரப்புக்கும் இடையில் மோதல் தொடங்கியது.

ஒக்டோபர் 05ஆம் திகதி யாழ்ப்பாணத்தை வந்தடைந்த ஜெனரல் சுந்தர்ஜி, புலிகளின் ஆயுதங்களைப் பறிக்க 'ஆபரேஷன்பவன்' நடவடிக்கையைத் தொடங்க உத்தரவிட் டார். இந்திய ராணுவம் மூன்று, நான்கு வாரங்களில் இதனை முடித்துவிடும் என்றார் சுந்தர்ஜி. இது மோசமான கணிப் பாக முடிந்தது. காரணம், இந்திய ராணுவத்தின் திட்டங்கள் முன்பே பிரபாகரனுக்குத் தெரிந்திருந்தன. காரணம், நிலைமை சுமுகமாக இருந்தபோது தனது தகவல் தொடர்பு அலைவரிசையை புலிகளுடன் இந்திய ராணுவம் பகிர்ந்து கொண்டிருந்ததுதான்.

ஒரு முறை ஹெலிகாப்டரில் வந்திறங்கி, புலிகளின் தலைவர்கள் அனைவரையும் பிடிக்க இந்தியப் படை திட்டமிட்டது. ஆனால், அதற்கு சில மணி நேரங் களுக்கு முன்பாகவே அனைவரும் அங்கிருந்து தப்பியிருந்தனர். ஆரம்பத்தில் புலிகளை 72 மணி நேரத்திலிருந்து 15

நாட்களுக்குள் சுற்றி வளைத்துவிடலாம் என இந்திய ராணுவம் நினைத்தது. ஆனால், ஒருபோதும் அது நடக்கவில்லை. அந்தத் தருணத்தில் இலங்கைக்கான இந்தியத் தூதராக இருந்த ஜே.என். தீட்சித், இந்தத் தோல்விக்கான காரணத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். "தமிழ் ஈழம் மீதான பிரபாகரனின் பிடிப்பையும் திட்டமிடுவதில் அவருக்கு இருந்த புத்திசாலித்தனம், எதிர்த்து நிற்பதில் உறுதியான தன்மை, ஒற்றை நோக்குடைய தன்மை ஆகியவற்றை மிகக் குறைவாக மதிப்பிட்டுவிட்டோம். அதேபோல, இந்திய அமைதி காக்கும் படைக்குச் சரியான தகவல்கள் அளிக்கப்படவில்லை. தமிழருக்காக இறங்கி வருவதில் ஜெயவர்தனேவுக்கு இருந்த அரசியல் உறுதியையும் நேர்மைத் தன்மையையும் அதிகமாக மதிப்பிட்டு விட்டோம். இலங்கைத் தமிழரிடமிருந்து புலிகளைத் தனியாக பிரித்துவிடமுடியும் என்ற எனது நம்பிக்கையும் பொய்த்துப் போனது" என்கிறார் ஜே.என். தீட்சித்" என்று குறிப்பிட்டுள்ளார் மணி சங்கர் அய்யர்.

இறுதியாக, "இலங்கை விவகாரத்தில் ராஜீவ் காந்தியின் ஈடுபாட்டை வரலாறு துல்லியமாக முடிவுசெய்யும். இந்திய, இலங்கை மக்களின் நலனுக்காக எவ்வித பிரதிபலனையும் தராத பணியை அவர் மேற்கொண்டார். அதற்கு அவர் தன் உயிரை விலையாகக் கொடுத்தார்," என்று `The Rajiv I Knew` நூலில் எழுதியுள்ளார் மணி சங்கர் அய்யர்.

The Rajiv I Knew and Why he was India's Most Misunderstood Prime Minister; Author: Mani Shankar Aiyar; Publisher: Juggernaut

For your Special Occasions
SHORT TERM RENTAL
TORONTO
Large House available for your Special Occasions Short Term Rental in Scarborough. Daily rental possible.
If Interested email :
georgeparan1@gmail.com